# இறையியல் களஞ்சியம்

CHRISTINA THEOLOGICAL SEMINARY
1823 SRI LANKA 1983

மலர்: 08 டிசம்பர் 2003 இதழ் : 18



# இறையியல் களஞ்சியம்

## காலாண்டு வெளியீடு

## IRAI - IYAL KALANJIYAM,
## TAMIAL THEOLOGICAL JOURNAL

டிசம்பர் – 2003 இதழ் : 18

**இலங்கை கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி**
**மருதனார் மடம் — சுன்னாகம்,**
**இலங்கை.**

பதிப்பாசிரியர் : அருட்தந்தை டி.ஆர்.அம்பலவாணர்

துணை ஆசிரியர்கள் : அருள்திரு.ஈனோக் பூ.புனிதராஜா

அருள்திரு.ரி.தேவநேசன்.

அருள்திரு.பெஞ்சமின் ஜெயராஜா.

அருள்திரு.வி.பத்மதயாளன்.

நிர்வாகி : திரு.சி.பி.பவிங்

மாணவர் குழு : சகோ.ஜோன்

சகோ.கெனடி,

சகோ.யூட் எழிலமுதன்

ஆலோசனை : பேராயர் அறிவர் எஸ்.ஜெபநேசன்

அச்சுப்பதிப்பு : யாழ் அமெரிக்கன் சிலோன் அச்சகம்.

வெளியீடு : இலங்கை கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி

மருதனார்மடம் - சுன்னாகம்.

(தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும்)

**Publication : Christian Theological Seminary of Sri lanka.**

**Maruthanarmadam - Chunnakam,**

**(For Private Circulation only)**

# பொருளடக்கம்

01. இறைவணக்கம் .........

02. ஆசிரியரிடமிருந்து ..............

03. மானிப்பாயும் ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியும்......

04. செல்வத்துட் செல்வம் அருட்செல்வம்.............

05. உங்களால் இவைகளை ஏற்கமுடியுமா?..............

06. இன்றைய சூழலில் நூல் நிலையங்கள்..........

07. கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்............

08. பாவம் என்றால் என்ன?..............

09. கிறிஸ்மஸ் தரும் செய்தி ........

10. நற்சிந்தனை..........

11. இறைவன் மனுருவானவர்..(சிறுவர் பகுதி)

12. செய்தி மடல்............

# A Christmas prayer

**Dear Heavenly Father,**

*How we lift our hearts to you at this Christmas time. We praise you for what Christmas means. We thank you that you did allow your Son to come down into this world and dwell among us.*

*We praise you, Oh Father, that you did allow us to look into the face of your Son and that we could see you as we looked. We thank you that you did bridge this great chasm between God and man and make it possible for us to approach you.*

*We praise you for Christmas. We cannot understand it. But you did tell us that this child's name should be called Emmanuel -God with us. And we believe you. We thank you, Oh Lord. We pray for the troubled world that is all around us. So confused, so frustrated, so undone. Men, women and children without hope. We ask you, Lord, that they may see the Son of Righteousness' at this Christmas season.*

*, We pray that they may indeed see just a flicker of the great light from the star 2000 years ago, and hear again the song of the angels "Peace on earth, good will toward men." Oh, how this world needs this today! We pray for our brothers and sisters around this globe that they might come to know you. We ask you that you will come into our hearts this Christmas in a new and living way. May there be a new reality of your presence in our lives, Lord, because this is what Christmas really means: that you did really come. And we pray that we may understand this as difficult as it is, because the Holy Spirit shall reveal it to us.*

*And so, Lord, we ask you today that you will brood over the hearts and lives of men, women and children. Put your great arms around about us; and draw us to yourself and we pray especially, Lord, as we're praying for those who do not know you, that those of us who do call you by name might indeed honour you in all that we do, in all that we say in this wonderful season. And we shall give you all the praise and the honour and the glory for Jesus' sake. Amen."*

# ஆசிரியர் பார்வையில்...

இனியவாசகர்களே !

சமாதானம் வரப்போகிறதென்று மகிழ்வுடன் நம்பியிருந்தோம்! நன் நம்பிக்கையுடன் நம் மக்கள் ஆவலோடு எதிர்பார்த்தனர். ஆனால், நடைபெறும் மாற்றங்களை உன்னிப்பாகக் கவனிக்குங்கால். மீண்டும் போர் தொடங்கப் போகிறதோ என அனைவரும் அஞ்சுகின்றனர். போர் தொடங்கினால் அதன் தாக்கங்களையும் கோரவிளைவுகளையும் அனுபவிக்கப் போவது நம்தமிழ் மக்களே, என்பதை உணர்ந்து அனைவரும் கலங்குகின்றனர்.

அன்று இத்தகைய துன்பச் சூழ்நிலையில் - 'உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக!' என்று மொழிந்த கிறிஸ்து பெருமான், இன்றும் பயப்படாதீர்கள்! நான் ஒரு போதும் உங்களைக் கைவிடமாட்டேன்! உங்களை விட்டு விலக மாட்டேன்! என்று இயம்புவதைக் கவனியுங்கள்! வாக்கு மனிதர் ஆனார், நம்மிடையே குடிகொண்டார் (யோ. 1:14) அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்! இன்று நம் நாட்டைச் சூழ்ந்து வரும் போர் மேகங்கள் - பெருங்காற்றாம் புனித ஆவியரின் திருவருளினால் அகன்று போவது நிச்சயம்!

நானே உலகின் ஒளி என்று மொழிந்த கிறிஸ்து பெருமானின் வல்ல செயல்கள் விரைவில் காணப்படும். இறைவனால் இயலாதது ஒன்றுமில்லை (லூக்கா 1:37) ஆகவே ஆண்டவரே எமது நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டும். ஆண்டவர் வீட்டைக் கட்டவில்லையெனில் அதைக்கட்டுவோரின் உழைப்பு வீணாகும். ஆண்டவர் நகரைக் காக்கவில்லை எனில், காவலர்கள் விழித்திருப்பது வீணாகும். (திருப்பா.127:1), எனவே, ஆண்டவர் தாமே இன்றைய அரசியல் சிக்கலைத் தீர்த்து - அரசியல் தலைவர்களின் மனதை மாற்றி, ஒன்றித்து நாட்டின் நலனுக்காக, நிரந்தர அமைதிக்காக அவர்கள் உழைக்க வேண்டுமென இடைவிடாது செபிக்க வேண்டும்

இந்த திடமான நம்பிக்கையுடன் - உலகின் ஒளியாக

வந்துதித்த இயேசு பிரானின் திருப்பிறப்பைநினைத்துக் கொண்டாடும் போது - ஏழைகளை மறவாதீர்கள்! துக்கத்தில் துயரத்தில் மூழ்கி இருப்போருடன் இயேசுநாதரின் அன்பைப் பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள் - "இறைவனின் தன்மையில் விளங்கிய இயேசு, தம்மை வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனித உருவில் தோன்றினார் (பிலி.2:6-7) என்பதே நத்தார் விழாவின் மையச் செய்தி! நலிவுற்றோரைச் சேர்த்துக் கொண்டாடும் கொண்டாட்டமே, நத்தார் கொண்டாட்டம் இக்கொண்டாட்டத்தில் தான், இயேசு பாலனை நாம் காணலாம்.

இந்த இதழில் - வழக்கம் போல், நமது பேராயரின் ஆய்வுக் கட்டுரை வெளியிடப்படுகின்றது. நமது ஆதீன் மக்கள் மகிழ்வுடன் படிக்கத்தக்கவாறு, நமது ஆதீன வரலாற்றுக் குறிப்பும் இதில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இதனை வாசித்து மகிழுங்கள்! நமது கல்லூரியின் புதிய நூலகர் அருள் திரு.வி.பத்மதயாளன் அவர்கள் நூல் நிலயத்தைப்பற்றி எழுதிய ஆய்வுக்கட்டுரை இன்றைய சூழநிலைக்குப் பொருத்தமாய் அமைந்துள்ளது. (இவர் எங்கள் இறையியல் கல்லூரியின் பழையமாணவன், பண்டத்தரிப்பு திருச்சபையின் அருட்பணியாளர் என்பது குறிப்பிடத்தக்கது ) பாவம் என்றால் என்ன? என்ற பொருளில் கலாநிதி ஞானறொபின்சன் அவர்கள் எழுதிய ஆய்வுக் கட்டுரையும் இந்த இதழில் வெளிவருகின்றது. வாசித்துப் பயனடையுங்கள்.

நமது ஆதினத்தின் பேராலய உதவிக்குரு அருள்திரு D.S.சொலமன், எங்கள் விரிவுரையாளர் அருள்திரு பெ.ஜெயராஜா, நமது சஞ்சிகையின் பதிப்பாசிரியர் எங்கள் மாணவர்களில் சிலர் ஆகியோரின் ஆக்கங்களும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன - வாசித்து உங்கள் விமர்சனங்களை எழுதுங்கள் - உங்கள் விமர்சனங்களும் , ஆலோசனைகளும் எங்களுக்கு ஊக்கத்தை அளிக்கும் ஆகவே எழுதுங்கள்!

உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்புகனிந்த நத்தார் நவவருட நல்வாழ்த்துக்கள! இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

# மானிப்பாயும் ஒக்ஸ்போட் ஆங்கில அகராதியும்

*பேராயர்.எஸ். ஜெபநேசன்.*

ஆங்கில அகராதிகளில் ஒப்புயர்வற்று விளங்குவது ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியாகும். இதனைச் சுருக்கமாக OED என்று குறிப்பிடுவார்கள் 1857ம் ஆண்டு இந்த அகராதியின் தொகுப்புவேலை தொடங்கியது. 1927ம் ஆண்டு தொகுப்பு வேலை முற்றுப் பெற்றது. இந்த அகராதி தொகுப்பில் முக்கிய பங்காற்றியவர் பேராசிரியர் ஜேம்ஸ் முரே என்பவராகும் (Professor James Murray) இப்பேராசிரியருக்கு இங்கிலாந்தின் பல பாகங்களில் இருந்தும் ஆங்கில மேதைகள் சொற்களுக்கு வரைவிலக்கணங்களும் அவை குறிக்கும் பல்வேறு அர்த்தங்களும் எழுதியனுப்பிக் கொண்டிருந்தனர். பத்தாயிரத்துக்கு மேற்பட்ட சொற்களுக்கு வரைவிலக்கணங்களும் அர்த்தங்களும் எழுதியவர் என்ற பெருமை டாக்டர் W.C.மைனர் என்பவர்க்குரியது இவர் மானிப்பாயில் பிறந்தவர் என்பதும் தமிழை நன்கு பேசப் பழகியிருந்தவர் என்பதும் உடுவில் மகளீர் கல்லூரியில் தமது ஆரம்பக்கல்வியை பெற்றவர் என்பதும் வினோதமான விடையங்களாகும். இவர் வளர்ந்த பின்னர் இங்கிலாந்தில் சிறிது காலம் வாழந்துவந்தார் அப்பொழுது ஒரு கொலை வழக்கில் ஈடுபட்டு சித்த சுவாதீனமற்றவர்களுக்கான புகலிடத்தில் தமது வாழ்வின் பெரும்பகுதியைக் கழித்தார் ஒரு கட்டத்தில் தம்மிடம் உள்ள பாவ உணர்வுகள் அறவே நீங்க வேண்டுமென்று தமது ஆணுறுப்பை வெட்டியெறிந்தார். பிற்காலத்தில் தனிமையும் முதுமையும் இவரைப் பெரிதும் வாட்டின. எனினும் அகராதிப்பணிக்கு தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து வந்தார். இவருடைய சோக வரலாறு இப்பொழுது புத்தக வடிவமாகக வெளிவந்திருக்கிறது. இந்தப் புத்தகத்தின் பெயர் PROFESSOR. AND THE MADMAN இந்த நூலை எழுதியவர் SIMON WINCHESTER இந்த நூல் இப்பொழுது அமெரிக்காவில் அதிகம் விற்பனையாகும் நூல்களில் ஒன்றாகும்.

(NATIONAL BESTSELLER)

நான் அமெரிக்காவில்[1] இருந்த பொழுது மைனர் குடும்பத்தாரோடு தொடர்புகொள்ள முயற்சித்தேன். துரதிஷ்டவசமாக அவர்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்கின்ற வாய்ப்பு எனக்கு கிட்டவில்லை. அவரின் உறவினர்கள் இப்பொழுதும் கொனக்டிக்கட் மாநிலத்தில் இருக்கின்றனர். இந்தநூலின் கதாநாயகனாகிய வில்லியம் மைனர் மானிப்பாய்க்கு மிஷனெரியாக வந்த அச்சகவித்தகர் ஈஸ்றமன் மைனரினதும் அவருடைய மனைவி லூசி மைனரினதும் மகனாவார்.

## *அமெரிக்க மிஷன் அச்சகம்*

அமெரிக்க மிஷனரிமார் 1816ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற் பணியாற்றத் தொடங்கினார்கள். ஆரம்பத்தில் ஓலைச் சுவடிகளில் திருமறை வாசகங்களை எழுதி குதிரைகளிற் சென்று விநியோகித்தனர். இந்தியாவிலிருந்து சகல தமிழ் நூல்களையும் அகராதிகளையும் அதிக விலை கொடுத்துப் பெற்றுக் கொண்டனர். ஆகவே தமக்கெனஒரு அச்சியந்திரம் இருக்கவேண்டும் என்று ஆவல் கொண்டார்கள். இவர்களுடைய வேண்டுகோளிற்குப் பொஸ்ரனில் இருந்த அமெரிக்கமிஷன் தாய்ச்சங்கம் இணங்கியது. ஜேம்ஸ் காரட் என்பவரை 1820ஆண்டு ஓர் அச்சியத்திரத்துடன் யாழ்பாணத்திற்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் அப்பொழுது இலங்கையிலே பிரிட்டிஷ் தேசாதிபதியாயிருந்த சேர் எட்வேட் பாண்ஸ் என்பவர், ஜேம்ஸ் காரட் இலங்கையிலே பணியாற்றுவதற்கு அனுமதி வழங்க வில்லை. அத்துடன் ஜேம்ஸ் காரட் உடனடியாகவே நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும் கட்டளையிட்டார். இக்காலக் கட்டத்தில் அமெரிக்கருக்கும் ஆங்கிலேயருக்கும் கடும் விரோதம் இருந்து வந்தது. அச்சகம் நிறுவுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் அமெரிக்க மிஷனெரிமார் ஜேம்ஸ் காரட் கொண்டுவந்த அச்சியந்திரத்தை நல்லூரில் இருந்த C.M.S தொண்டரான ஜோசப் நைற் என்பவருக்கு விற்று விட்டனர்.

## ஈஸ்ற்மன் மைனர் யாழ்ப்பாணம் வரல்

1932ஆம் ஆண்டு கோல்புறுச் விசாரனைக்குழுவின் சிபாரிசுகளை அடுத்து அமெரிக்க மிஷன் மீது போடப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டன எனவே அமெரிக்க மிஷனரிமார் தமக்கு ஒரு அச்சக வித்தகரை அனுப்பிவைக்க வேண்டும் என்று தமது தாய்ச் சங்கத்துக்கு எழுதினார்கள் ஈஸ்ற்மன் மைனரும் அவருடைய மனைவி லூசியும் கொங்கிறிகேசனல் திருச்சபையைச் சேர்ந்தவர்கள் ஈஸ்மன் மைனர் அச்சுப்பதிப்பில் பயிற்ச்சி பெற்றவர் தனக்கென அச்சகத்தை நிறுவி அதனால் பெரும் பொருள் ஈட்டியவர். ஆனால் அவருக்கும் மனைவி லூசிக்கும் கீழைத் தேயங்களுக்குச் சென்று கிறிஸ்தவ நற்செய்தியை அறிவிக்கவேண்டும் என்ற ஆவல் இருந்தது. எனவே அமெரிக்கமிஷனின் தலைமைக் காரியாலயத்தின் வேண்டு கோளுக்கிணங்க யாழ்பாணம் செல்வதற்கு முன் வந்தர்கள்.

1833ஆம் ஆண்டு ஈஸ்ற்மன் மைனர் தமது அச்சகத்தை விற்று விட்டுத் தனது மனைவியோடு நீராவிக் கப்பல் மூலமாக இலங்கை நோக்கிப் புறப்பட்டார் 1834ம் ஆண்டு மார்ச் மாதம் அவர்கள் இலங்கையை வந்தடைந்தனர். மானிப்பாயில் அவர்களது பணி ஆரம்பமானது அமெரிக்க மிஷனெரிமார் நல்லூர் C.M.S. மிஷன் ஸ்தாபனத்துக்கு விற்ற அச்சகத்தைத் திரும்பவும் விலைக்கு வாங்கினர். 1834ம் ஆண்டு அமெரிக்க இலங்கை மிஷன் அச்சகம் உதயமானது. இதனுடைய பொறுப்பாளராக ஈஸ்மன் மைனர் நியமிக்கப்பட்டார். நான்கு ஊழியர்களுடன் ஆரம்பமான இவ்வச்சகம் ஈஸ்மன் மைனர் இளைப்பாறிய வருடத்தில் அதாவது 1850ம் ஆண்டு எழுபதுஊழியர்களைாக் கொண்ட ஸ்தாபனமாக மாறியது. ஈஸ்மன் மைனரோடு பணிபுரிந்த பலர் பின்னர் ஆறுமுகநாவலர் அமைத்த சைவப்பிரகாச அச்சியந்திர சாலைக்குச் சென்று பணியாற்றினார்கள்.

**வில்லிம் மைனரின் பிறப்பு**

வில்லியம் செஸ்டர் மைனரின் பெற்றோர் யாழ்ப்பாணம் வந்த வருடத்திலேயே மானிப்பாயில் அதாவது 1834ம் ஆண்டு யூலை மாதம் பிறந்தார். இவர் பிறந்து இரண்டு வருடங்களிற்கு பின்னர் லூசி என்ற பெயர் கொண்ட பெண்குழந்தையும் பிறந்தது. பிள்ளைப்பருவத்தில் வில்லியம் மைனர் துடி துடிப்பும் குறும்பும் நிறைந்தவராகக் காணப்பட்டார். ஒரு முறை குதிரையில் இருந்து விழுந்து கழுத்துப்பட்டி எலும்பை முறித்துக் கொண்டார். இன்னொருநாள் மரத்திலிருந்து விழுந்து சில மணிநேரம் மயக்க நிலையில் இருந்து சுகம் பெற்றார் அடிக்கடி மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டார். அவருக்கு மூன்று வயதாய் இருந்த போது அவரது தாயார் லூசி காச நோயினால் பீடிக்கப்பட்டு இறந்து போனார். எனவே தந்தை ஈஸ்மன் மைனர். இன்னொரு மனைவியைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் இறங்கினார். அமெரிக்காவிற்கு செல்லாமல் மலேசியாவில் பணியாற்றி வந்த மிஷனில் இருந்து ஓர் பெண்ணைத் தேர்ந்து கொள்ளும் நோக்கத்தோடு புறப்பட்டார். தம்முடைய மகள் லூசியை உடுவிலில் இருந்த ஸ்போல்டிங் தம்பதியினருடன் விட்டுவிட்டு. பயணத்தை மேற்கொண்டார் சிங்கப்பூரில் யூடித்ரெயிலர் (JUDITH TAYLOR) என்ற திருமணமாகாத பெண்ணைச் சந்தித்து இலங்கைக்கு கூட்டிவந்தார். ஈஸ்மன் மைனர் - யூடித் திருமணம் 1839ம் ஆண்டு நடைபெற்றது யூடித் உடுவில் மகளீர் பாடசாலையில் கற்பிக்கத் தொடங்கினார். செஸ்ரடர் மைனரும் லூசிமைனரும் தமது கல்வியை உடுவிலில் ஆரம்பித்தனர் யூடித் தமிழை நன்கு கற்றறிந்தார். செஸ்டர் வில்லியத்திற்கு தமிழ் மொழியைக் கற்றுக் கொடுத்தார். மைனர் யூடித் தம்பதிகளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. இவர்கள் இளமைப் பருவத்திலேயே இறந்து போனார்கள் முதல் தாரத்து பின்னையான லூசியும் சிறுவயதில் மரித்துப் போனாள்.

அமெரிக்க மிஷனரிமார் மானிப்பாயில் ஒரு சிறந்த நூலகத்தை அமைத்திருந்தார்கள் இங்கு பல ஏட்டுச் சுவடிகளும்

காணப்பட்டன. இவற்றை சிறுவன் வில்லியம் மைனர் இளமையிலேயே கற்றறிந்திருந்தார் உடுவில் மகளிர் கல்லூரியில் அவனுக்கு தரமான கல்வி வழங்கப்பட்டது. அவர் உடுவிலில் பெற்ற கல்வி அமெரிக்கக் கல்விக்கு சமமானதாக இருந்தது. என்று SIMON WINCHESTER குறிப்பிடுகின்றார். தகப்பனார் அச்சுப் பதிப்பில் ஈடுபட்டிருந்தமையினால் அவர் வீட்டில் பலதுண்டுப் பிரசுரங்களும் பத்திரிகைகளும் இருந்தன. பெற்றோர் குதிரை மீது பிரயாணம் செய்யும் போது வில்லியத்தையும் அழைத்து செல்வார்கள். பன்னிரண்டுவயதாக இருக்கும்பொழுதே வில்லியம் தமிழை நன்றாகப் பேச அறிந்து கொண்டார்.

வில்லியத்திற்குப் பதின்னான்குவயதாக இருக்கும் பொழுது தகப்பனார் அவரை உயர் கல்விக்காக அமெரிக்காவுக்கு அனுப்பத்தீர்மானித்தார். நான்கு மாதம் கடலில் பிரயாணம் செய்து அமெரிக்காவைச் சென்றடைந்தார். மருத்துவக் கல்வி பெற்று டாக்டராக பணியாற்ற வேண்டும் என்பதே வில்லியம் மைனரின் இலட்ச்சியமாக இருந்தது. 1863ஆம் ஆண்டு அவருடைய 29தாவது வயதில் யேல் மருத்துவக் கல்லூரியில் இருந்து டாக்டராக வெளியேறினார் வில்லியம் மைனருக்கு இராணுவத்தில் சேர்ந்து நாட்டுக்காக உழைக்க வேண்டும் என்ற ஆவல் இருந்தது.

எனவே அமெரிக்க இராணுவத்தில் ஒரு கப்டனாக இணைந்து கொண்டார். இக்காலக் கட்டத்தில் அமெரிகாவிலே தென் மானிலங்களுக்கும் வடமானிலங்களுக்குமிடையில் அடிமைமுறை காரணமாகக் கடும் போர் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இப்போரில் இளைஞர்கள் பட்டஅவதியும் சிந்திய குருதியும் அவருடைய உள்ளத்தில் ஆழமான வடுக்களை ஏற்படுத்தி விட்டன. அமெரிக்காவில் தொடர்ந்து இருக்க அவர் விரும்பவிலை. ஐரோப்பிய நகர்களுக்குச் சென்று கலை இலக்கியத்துறைகளில் ஈடுபட முயற்ச்சித்தார். லண்டன், பரிஸ், உரோம், வெனிஸ் ஆகிய கவின்மிகு நகரங்களைப் பார்த்து மனதிலே சாந்தி ஏற்படுத்திக் கொள்ள விரும்பினார். முதலில் லண்டன் மாநகரிர்க்கு கப்பல் மூலமாகப் புறப்பட்டுச் சென்றார். லண்டனிலே

லம்பெத் மார்ஷ் அல்லது லம்பெத் சதும்பு என்னும் இடத்திலே ஒரு வீட்டின் அறையை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு தமது ஐரேப்பிய சுற்றுப்பயணத்தை திட்டமிட்டார். லம்பெத் மார்ஷ் அப்பொழுது கந்தர்புரி பேராயருக்கும் கோண்வேல் பிரபுவுகளுக்கும் சொந்தமாக இருந்தது இந்த இடம் லம்பெத்துக்கு அருகாமையில் இருந்தபொழுதிலும் ஏழ்மைமிக்க புறநகராகவே காணப்பட்டது. களவு, விபசாரம், மதுபானம் என்பன நிறைந்த பகுதி. சார்ள்ஸ்டிக்கின்ஸ் இவ்வாறு சீர்கெட்ட புறநகர் பகுதிகளை தமது நாவல்களில் சித்தரித்துள்ளார்.

## வில்லியம் மைனரின் கொலைக் குற்றம்

வில்லியம் மைனர் வைத்தியராகக் கற்று அரங்கேறிய பொழுதிலும் அவர் சற்று சலனப் போக்கு உடையவராகவும் சிற்சில சமயங்களில் சித்த சுவாதீனமற்றவராகவும் காணப்பட்டார். அயர்லாந்து மக்கள்மீது இவருக்குத் தனிப்பட்ட கோபமும் பயமும் இருந்தன. தமக்கு அவர்கள் எப்படியாவது கொடுமைசெய்வார்கள் என்ற எண்ணத்தை வளர்த்து வந்தார். தம்மைக் கொல்வதற்கும் தமது அறையின் கண்ணாடிகளை உடைப்பதற்கும் திட்டங்கள் தீட்டப்படும் என்று எண்ணினார் தமது அறைக்குள் பிறர் வந்து தனது புத்தகங்களைக் குழப்புவதோடு தளபாடங்களையும் உடைப்பார்கள் என்று பயந்திருந்தார். எப்பொழுதும் தனது தலைமாட்டில் றவைகள் பொருத்தப்பட்ட கைத்துப்பாக்கியை வைத்திருந்தார். 1972ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 17ம் திகதி அந்த சோக நிகழ்ச்சி நடைபெற்றது. அன்றிரவு வில்லியம் மைனருக்கு அறைக்குள் ஒருவன் புகுந்து தனது கால் மாட்டில் நிற்பதாக ஒரு பிரமை ஏற்பட்டது. எனவே தனது தலையணைக்குக் கிழ்இருந்த கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டு அவனைத் துரத்தும் பாவனையில் படிகளால் விரைவாக இறங்கி வீதியிலே அவனைத் துரத்திகொண்டு ஓடுவதுபோல் ஓடினார் வீதியிலே GEORAGE MERRETT என்ற ஒர் ஏழைத்தொழிலாளிதான் பணியாற்ற வேண்டிய மதுபான உற்பத்திசாலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். இவனுக்கு ஏழுபிள்ளைகள் மதுபான உற்பத்திச் சாலையில் நிலக்கரியை அள்ளி நெருப்பில் போடுவது இவன் வேலை. அன்று அதிகாலை இரண்டு மணிக்கு அவனுடைய பணி ஆரம்பமாக

வேண்டியிருந்தது. தன்னுடைய அறைக்குள் இருந்தவன் இந்த அப்பாவித் தொழிலாளிதான் என்று எண்ணி அவன்மீது தமது கைத்துப்பாக்கியால் மூன்றுதடவைகள் சுட்டுக் கொன்று விட்டார். விசாரனையின் போது வில்லியம் மைனர் சித்தசுவாதினமற்றவர் என்று நிருபிக்கப்பட்டது. எனவே நீதிமன்றம் அவரை சீவிய காலமெல்லாம் சித்த சுவாதீனம் அற்றவர்களுக்கான புகலிடத்திலிருக்கவேண்டும் என்று தீர்ப்புக் கூறியது.



## ஒக்ஸ்போட் ஆங்கில அகராதிக்குத் துணைபுரிதல்

சித்தசுவாதினமற்றோர் புகலிடத்தில் அவர் இருந்த பொழுதுதான் ஒக்ஸ்போட் ஆங்கிலஅகராதிக்கு வரவிலக்கணங்களும் சொற்களுக்கான அர்த்தங்களும் அனுப்பிக் கொண்டிருந்தார். அகராதித் தொகுப்பாளர், பேராசிரியர் ஜேம்ஸ் முறே இவரிடமிருந்து பல உதவிகளைப் பெற்றாலும் அவரை நேரில் சந்தித்ததில்லை, இருவருக்குமிடையில் கடிதப்போக்குவரத்துகள் மாத்திரமே இருந்தன. 1896ம் ஆண்டு அகராதி வேலை ஓரளவுக்குப் பூரணமடைந்து வருகின்ற வேளையில் வில்லியம் மைனரைச் சந்தித்து, தனது நன்றியைத் தெரிவிக்க விரும்பினார். முன்னர் பலமுறை வில்லியம் மைனரை அவர் ஒக்ஸ்போட்டுக்கு அழைத்திருந்த போதிலும் மைனர் செல்லவில்லை. அதற்கான காரணங்களையும் கூறவில்லை. வரமுடியாமைக்கு வருந்துகிறேன் என்பது மட்டுமே அவருடைய மறுமொழியாக இருந்தது. பேராசிரியர் ஜேம்ஸ் முறே தாமே வில்லியம் மைனருடைய இடத்துக்குச் சென்று நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவிக்க விரும்பினார். ஜேம்ஸ்முறே Crowthrone ரயில் நிலையத்தை வந்தடைந்தபோது ஒரு குதிரைவண்டில் அவரை ஏற்றிச் செல்லுவதற்கு ஆயத்தமாக இருந்தது. தாம் செல்கிற இடம் சித்தசுவாதின மற்றவர்களுக்கான புகலிடம் என்பதை அவர் அறியவில்லை. ஆனால் அங்கு சென்ற பொழுது அதன் பாதுகாவலரையே வில்லியம் மைனர் என்று எண்ணி மிகுந்த மரியாதையுடனும் பணிவுடனும் ஜேம்ஸ்முறே பேச்சைஆரம்பித்தார். அப்பொழுது அப்பாதுகாவலர் போரசிரியர் முறே வந்திருக்கும் இடம் சித்தசுவாதினம் அற்றவர்களின் புகலிடம் என்றும்

அதிலே ஒரு நோயளியாக வில்லியம்மைனர் இருக்கிறார் என்றும் குறிப்பிட்டார். வில்லியம் மைனருடனான சந்திப்பு பின்னர் நடைபெற்றது.

வில்லியம் மைனர் நீண்டகாலம் இந்தப்புகலிடத்தில் வாழ்ந்து வந்தார். அவர் கொலை செய்த GEORAGE MERRETT மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் தம்மாலான உதவிகளைச் செய்தார். பலவிதமான உணர்வுகள் அவர்உள்ளத்தில் தோன்றி அவரை வாதித்தன. தனிமையும் பலவீனமும் அவரை வாட்டின. 1902ம் ஆண்டு தன்னுடைய பாவ உணர்வுகள் போகட்டும் என்று சொல்லி தனது ஆணுறுப்பபை தன்னிடம் இருந்த கத்தியால் வெட்டியெறிந்தார். பின்னர் தக்கசிகிச்சையினால் காப்பாற்றப்பட்டார். இவருடைய அவலநிலையைக் கண்டு இங்கிலாந்திலிருந்து அமெரிக்க தூதரக்கத்திற்குப் பலமுறை கடிதங்கள் எழுதப்பட்டபோதும் அவர்கள் கவனிக்கவில்லை, ஆனால் இறுதியில் அவர் நோயினாலும் மூப்பினாலும் வருந்திய பொழுது தாய்நாடான அமெரிக்காவும் இங்கிலாந்தும் அவர்மீது இரக்கம் கொண்டன. அவர் சொந்த நாட்டுடிற்குத் தமது உறவினர்களுடன் அந்திய காலத்தைச் செலவழிக்க அனுமதிக்கப்பட்டார். 1910ஆண்டு அமெரிக்கா சென்ற வில்லியம்மைனர் 1915ல் தமது 71வது வயதில் இவ்வுலக வாழ்வினை நீத்தார்.


*SimonWinchester : The Professor and the Madman –*
*Atale Of Murder Insanity and making of English Dictionary,*
*Published by Happer Perennial*

**Happy the Home when God is There**

*"Happy the home when God is there, and love fills every breast;*
*When one their wish, and one their prayer, and one their heavenly rest, Happy the home where Jesus' name is sweet to every ear;*
*Where children early lisp His fame, and parents hold Him dear, Happy the home where prayer is heard, and praise is wont to rise,*
*Where parents love the sacred word, and all its wisdom prize,*
*Lord, let us in our homes agree this blessed peace to gain,*
*Unite our hearts in love to Thee, and love to all will reign." -*

John B. Dykes (1823-1876)

# செல்வத்துட் செல்வம் அருட்செல்வம்



‘அருள்’ என்ற சொல் தெய்வீகப் பண்புடைய சொல்லாகும் - கிறிஸ்தவசமய திருமறையில் ‘அருள்’ என்ற சொல்லிற்கு தெய்வீகப் பண்பும் வழங்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம் இந்து சமயத்தின் கோட்பாட்டிலும் ‘அருள்’ என்ற வார்த்தை தெய்வீகப் பண்புடன் ஒரளவு காணப்படுவதைக் காண்க. பெருநாவலர்வள்ளுவ நாயனாரும் “அருளுடமை” என்ற அதிகாரத்தில் (25) அருளின் சிறப்பை அழகாக எடுத்து விளக்குவதைக் காண்க. திருமறையின் பழைய மொழியாக்கத்தில் இதனை “கிருபை” எனப்படுகிறது - ஆங்கிலத்தில் Grace எனப்படும்.

நமக்குக் கிடைக்கும் செல்வத்தை இருவகையாகப் பிரிக்கலாம் ஒன்று கண்ணாற் கண்டு மகிழ்வது, அடுத்தது மனத்தால் எண்ணி மகிழ்வது- நீர், பொன், மணி, பொருள் போன்றவை மற்றது கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், அருள் போன்றவை.

**“அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் – பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணு முள”**

*என்பது வள்ளுவனார் வாக்கு,*

அதாவது, பொருட்செல்வம் அறிவற்ற கீழ் மக்களிடத்தும் உள்ளது – ஆனால், செல்வங்களில் மிக உயர்ந்த செல்வம் அருட்செல்வம், உயர்ந்த பண்புடையவர்கள் உளது. இச்செல்வம் மேன்மக்களிடத்தில் மட்டுமே காணப்படும்

அன்பும் அருளும் ஒன்றல்ல – அன்புக்கு வேறானது “அருள்” அருளொடும் அன்போடும் - என்ற தொடர் இதனை மெய்ப்பிக்கும் - அன்புடமை பற்றிக் கூறிய வள்ளுவனார் – அடுத்த அதிகாரத்தை அருளுடமை பற்றியும் கூறியிருப்பதே இதற்குச் சான்றாகும்.

அன்பும் அருளும் ஒன்றல்ல - இவைஇரண்டும் இரக்கமற்ற உள்ளத்தில் தோன்றுவதில்லை. "கருணை" என்ற ஒரே பொருளைக் குறிப்பன என்பது சிலரின் கருத்தாகும் ஆயினும், அன்பும் அருளும் உண்மையில் வேறாக இருந்தும் அவை ஒன்று போலவே காட்சியளிக்கின்றன. 'அன்பு' என்பதும் 'அருள்' என்பதும் மக்கள் உள்ளத்தே இறங்கி விளையும் ஒன்றேஆகும் - எனினும் இடவேறுபாட்டாலும் நிலைவேறுபாட்டாலும் தகுதி வேறுபாட்டாலும் பெயர் வேறுபடுகின்றன.

அதாவது தொடர்புடையார் இடத்து தோன்றுவது 'அன்பு' எனவும் பிறரிடத்தில் தோன்றுவது 'அருள்' எனவும் 'அன்பு' எனவும் - பெரியோரிடத்து விளைவது 'அருள்' எனவும் - இல்லறத்தில் காணப்படுவது 'அன்பு' எனவும் துறவறத்தில் காணப்படுவது 'அருள்' எனவும் கூறலாம்.

இதனையே அன்பு நெறி என்றும் அருள் நெறி என்றும் கூறுவர். திருக்குறளில் "அன்பு" என்றபதம் 24இடங்களிலும் - "அருள்" 18இடங்களிலும் காணப்படுகின்றன. அன்பு பற்றுதலையும் - அருள் இரக்கத்தினையும் குறிக்கும் - அன்பை மனிதத்தன்மையின் மீதும் - அருளை தெய்வத்தன்மையின் மீதும் ஏற்றிக் கூறுவதுண்டு.

இறைவனிடத்திலிருந்து மக்கள் வேண்டுவது அன்பிலும் பார்க்க அருளையே அது பேரருளாகவும், பெருங் கருணையாகவும் காட்சியளிக்கும், இதனை இராமலிங்க அடிகளார் என்னும் வள்ளலார் தாம் - கண்டு கொண்ட தெய்வம் "பேரருள் ஒளி " பெருங்கருணைவடிவு " என்றபொருள்பட "அருட் பெருஞ் ஜோதி தனிப் பெரும்கருணை என்று பாடினார்.

"அருட்செல்வம்" என்பதின் பொருளை ஆழமாகச் சிந்தித்தால் - ஒருவரை ஒருவர் அடித்து துண்புறுத்துவது 'விலங்குக்குணம் ' தன்னலம் கொண்டு உயர்ந்து செல்வது

'பறவைக்குணம்' - தீமைசெய்தவர்களுக்கு தீமை செய்வது 'தேள் பாம்புக்குணம்' - தீமைசெய்யாதவர்களுக்கும் தீமைசெய்வது 'பேய்க்குணம்' - தீமைசெய்தவனை மன்னித்து அதைமறந்து அவனுக்கு எவ்வித தீமையும் செய்யாதிருப்பதே 'மனிதகுணம்' - இவற்றைஎல்லாம் கடந்து தீமைசெய்தவர்க்கும் நன்மைசெய்வதே 'தெய்வீகக்குணம்' இந்தக்குணமே அருட்செல்வம் எனப்படும்.

பொருட்செல்வம் பெற பலஆண்டுகள் கடினமாக உழைக்க வேண்டும் - அருட்செல்வம் பெற சில வினாடிகள் ஆழ்நிலைத்தியானத்தில் இருந்து, தன்னை இறைவன் திருவடிகளில் அர்ப்பணித்து மனதை ஒருமுகப்படுத்திப் பெறலாம். அதாவது அருட்செல்வம் மனதால் எண்ணிப் பெறவேண்டியதொன்றாகும். எனவே, மிகஎளிதாகப் பெற வேண்டிய இவ்வுயர்ந்த அருட்செல்வத்தை நாம் ஒருபோதும் இழந்து விடாதிருக்க வேண்டும்.

நம் முன்னோர் - " என் கடன் பணி செய்து கிடப்பதே " என்றும் "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் " என்றும் " எவ்வுயிரும் பராபரனின் சந்நிதியதாகும் " என்று கூறியதைச் சிந்தித்துப்பாருங்கள். 'பிறர் வழவேண்டும் நான் சாகவேண்டும்' என்ற முதுமொழிக்கேற்ப, பிறரை வாழவைப்பதற்காகவே நான் இவ்வையகத்தில் வந்திருக்கிறேன் (யோவான் 10:10) என்று யேசுபிரான் கூறியதைச் சிந்தியுங்கள் - பிறரை வாழவைப்பதற்காகவே நாம் வாழ்கின்றோம் என்று பெரும்பக்தர்கள் கூறியிருப்பதை நினைத்துப்பாருங்கள் - " உன்னை நேசிப்பது போல் பிறரையும் நேசி உயர்வு தாழ்வுகளை எண்ணி ஒருவரையும் வெறுத்தொதுக்கக் கூடாது. அவ்வாறு செய்தால், இறைவன் நமக்கு இலவசமாக வழங்கிய அருட்செல்வத்தை இழந்து விடுவோம் என்பதை அறிக.

எந்த நாட்டிலும்-அமெரிக்காவிலுங்கூட, வறுமை யானவர்களே பெரும்பான்மையானோர், அவாகளிற்பலர் நமது நாட்டில் - ஊரில், தெருவில், அருகில் இருக்கின்றனர். அவர்கள் " ஏழைகள்

" என்றெண்ணிக் குறைவாக மதிக்கின்றனர் நம்மிற்பலர். அவர்களிலும் பார்க்க தாம் உயர்ந்தவர்கள் என்று ஒரு போதும் நினைக்கப்படாது. அவ்வாறு எண்ணினால், நமக்குள் இருக்கின்ற அருட்செல்வத்தை இழந்து விடுவோம். - "அறிவால், ஆற்றலால், வலிமையால், பொருளால் உன்னைவிட மெலிந்தவர்களை ஒதுக்கிவிடாதே துன்பத்தில் மூழ்கியிருப்போரைக் கண்டால் விலகிப்போய்விடாதே அவர்கட்கு உன்னால் செய்யக்கூடிய உதவியைத் துணிந்து செய், விரைந்து முடிந்தவரை செய் - அப்போது உன் உள்ளத்தில் அருட்செல்வம் சுரக்கும் - முகத்தில் அருள் ஒளி வீசும் - தெருவில் விழுந்து கிடப்பவனை நெருங்கி வேண்டிய உதவியை உடனேசெய். அப்பொழுது அருட் செல்வம் உன்னை மகிழ்ந்து தழுவும்" என்றார் ஓர் அறிஞர் - இயேசுபிரான் கூறிய " நல்ல சமாரியன்" என்ற உவமையை நினைத்துப்பார் அவ்வாறே அருட்செல்வத்தை உடையவர்கள் செயல்படுவார்கள் என்பது உண்மை.

நாங்கள் பிறருடன் பேசும் போது தீச்சொல், சுடுசொல், கடுஞ்சொல், என்ற பாணியில் சொற்களைப் பாவிக்கப்படாது - இத்தகைய சொற்களைக் கூற நாக்குப் படைக்கப்படவில்லை, " இன்சொல்லால் அன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாது" என்பது நல்லறிஞர்களது வாக்காகும். கடப்பாறைக்கு பிளவு படாத கருங்கற்பாறை பசுமரத்தின் வேருக்கு பிளவு பட்டுவிடும் என்பது நாம் கண்டு வரும் உண்மை. நாம் வாழ்கையில் அடையும் வெற்றி தீச் சொல்லால் வராது தீஞ்சொல்லினால்தான் வரும் தீஞ்சொல் அருட்செல்வத்தை அழிக்கும். இனிய சொற்களினால் பிறருடன் பழகினால், அனைவரும் உன் அருளுரையைக் கேட்க ஆவலுடன் ஓடி வருவார்கள். உன்கண்களில் அருள் ஒளி வீசுவதைக் கண்டு மகிழ்வார்கள் - என்பதை திருப்பணியாளர்கள் மறக்கப்படாது.

" **ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே**" என்பது " **இனியது நாற்பது** " என்ற செய்யுட் தொகுப்பில் உள்ள ஓர் செய்யுளின் வரி. மேலும் " தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூண் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்" என்றார் வள்ளுவப்

பெருந்தகை - அதாவது, உன் உடல் பெருகுவதற்காகப் பிற உயிர்களின் சதையைத்தின்பது நல்லதல்ல என்பதே இதன் பொருள். இத்தகையவரின் உள்ளத்தில் அருட்செல்வம் தங்காது என்பது சில பக்தர்களின் கருத்தாகும் - மக்கள், விலங்குகள், பறவைகளுக்கும் மட்டமல்ல - செடி, கொடிகளுக்கும் உயிர் உண்டு. வருந்திய முல்லைக் கொடி வாடாமல் படர்வதற்குத் தன் தேரையே கொடுத்து மகிழ்ந்தான் பாரி மன்னன். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்பது அருட்பிரகாச வள்ளலாரின் வாக்கு - பயிரைக்கண்டு வாடிப் பழகி விட்ட உள்ளம் வாடிய உயிரைக் கண்டு நொந்து உயிர் கொடுக்கும் அல்லவா? - இதனை இயேசு பெருமானின் வாழ்கையில் காண்கிறோம். மக்கள் பாவத்தில் வதங்கி மடிந்து போகாதிருக்கத் தன் உயிரையே சிலுவையில் ஈந்த இயேசுபிரானின் செயல்களில் அருட்செல்வம் மிளிர்ந்தது.

இறைவன் "அருள் ஒளியினன். அருள் வடிவினன்" அவன் அருளே கண்ணாகக் கொண்டு கண்டு - " அவனருளாலே அவன் தாள் வணங்கி " அவன் திருவருளைப் பெற வேண்டும். அதற்கு அன்பு நெறியும் அருள் நெறியும் பெருந்துணை செய்யும். ஒருவன் பெற்றுள்ள கல்விச் செல்வம், பொருட் செல்வம் ஆகியன பெருகி வளர்ந்து, பயனுற்று சிறப்புற்று விளங்க வேண்டுமானால், அவன் அருட்செல்லத்தையும் பெற்றிருக்க வேண்டும். அன்றேல், அவன் எத்தகைய செல்வத்தைப் பெற்றிருப்பினும், அதனால் பயன் பெறான் - அருட் செல்வம், நாம் உழைக்காமல், வருந்தாமல் கொடையாகப் பெறுகின்ற. பெருஞ்செல்வமாகும். இதனாலேயே " அது செல்வத்துட் செல்வம் எனப் பெறுகின்றது. நாம் அருட்செல்வத்தைப் பெற, இறையருளை நாடவேண்டும். அப்பொழுது அருட்செல்வத்தை வழங்கி அருட்செல்வனாகத் திகழலாம். சீரழிந்த இன்றைய சமுதாயத்தை அருள் ஒளி நிறைந்த சமுதாயமாக்கலாம்"

" **வாடிய பயிரைக் கண்டு வாடிய உள்ளம் அன்றே**

**தேடிய செல்வம் ஒன்று அது திரு அருளாம் செல்வம்** "

எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் உங்கள் உள்ளத்தை ஆட்கொள்வதாக.

# உங்களால் இவைகளை ஏற்க முடியுமா?

எமது இறையியல் கல்லூரிக்கு ஆகஸ்ட் மாதம் 19ந் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 6.30 மணி போல அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து இரு இறையியல் அறிஞர்கள் வருகை தந்திருந்தார்கள். ஒரு அமெரிக்க ஆண். பெயர் அறிவர் மைக்கேல் கே .கினமென், மற்றவர் இலங்கையைச் சேர்ந்தவர் பெண் பெயர் அறிவர் தமயந்தி நைல்ஸ். இருவரும் ஏதேன் இறையியல் கல்லூரி (மீகோரி அமெரிக்கா)வில் பணிபுரிந்து வருகின்றனர். அவாகள் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்த வேளையில் நமது மாணவர்கள் பல கேள்விகளைத் தொடுத்தனர். இவற்றில் மிக முக்கியமானவற்றைச் கவனிப்போம். ஆண் புணர்ச்சியாளர் பேராயர் றெபின்சனின் தெரிவு பற்றிக் கேட்கப்பட்டது. இதற்கான பதில் தான் வினோதமானது. அதில் என்ன தவறு இருக்கின்றது என்றனர் இருவரும். அமெரிக்காவில் ஓரினச் சேர்க்கையாளர்கள் மற்றவர்களினால் ஒதுக்கப்பட்டுள்ளனர். எனவும் இவர்கள் பல்லினச் சேர்க்கையாளரிலும் பார்க்கத் திறமையான வகையில் பணிபுரிவதாலும் மற்றவர்களைப் போலல்லாமல் ஓரினச் சேர்க்கையாளர்களின் அறநெறிவாழ்வு சிறந்தது என்கின்றனர். எனவே அவர்களுக்கு விடுதலை கொடுக்கவும் ஊக்குவிக்கவும் திருச்சபை முன்வருவதில் என்ன தவறு என்கின்றனர். விலங்குகளும் இப்படியான செயலில் ஈடுபடுகின்றது இது கலாச்சாரத்துக்கு விரோதமான செயல்அல்லவா? இதனை கலச்சாரம் அனுமதிக்குமா என்று வினவப்பட்டது. கலாச்சாரம் பெண்களுக்கு உரிமைகொடுக்க முன்வராமல் இருக்கின்றது. இதுவும் தவறாக இருக்கின்றது. தானே என்ற பதில் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பெண்மணி கூறியது தான் வியப்பாக இருக்கின்றது. அந்த அமெரிக்க அறிஞரின் மூத்த மகள் இந்தியாவில் கல்விகற்பதாகக் கூறியதும் குறிப்பிடத்தக்கது. இவர் இதை பெருமையுடன் கூறி எமது கலாச்சாரத்துக்கும் திருமறைக்கும் ஏற்புடையதல்லாத விஷயங்களை கூறியது தான் வியப்பாக இருக்கின்றது. பவுல் அபபோஸ்தலன் இருபது

நூற்றாண்டுகளுக்கு முன்னர் ரோமர் 1:26 - 28 பகுதியில் கடிந்துரைத்தது ஏனோ என அங்கலாய்க்க வேண்டியுள்ளது. ஆரம்பத்தில் பெண்களின் அருட்பொழிவை திருச்சபை தயங்கியது. ஆனால் தற்போது ஏற்றுக் கொள்கின்றது தானே, இதே போல இச் செயற்பாடுகளையும் ஏற்கும் எனநம்புவதாக கூறுவது இன்னமும் வியப்பாகவிருக்கின்றது.

அடுத்ததாகக் குறிப்பிடக் கூடியது யாதெனில் நீதிக்கான போர் என்ற நிலைப்பாட்டில் அமெரிக்கா தேசம் ஈராக் தேசத்தில் போரைத்தொடங்கி பலவகையான அழிவுகளின் மத்தியில் இன்று தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. இதே வகையான காரணத்தைக் கூறி இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடுமா எனக் கேட்கப்பட்டது. திருச்சபைகள் இதில் நடக்கும் அநியாயமான செயற்பாடுகளுக்குக் குரல் கொடுத்தாலும் இவ்விஷயத்தில் பொருளாதார உலகமயமாக்கல் காரணங்களுக்காக தலையிடுவதில் தவறில்லை என்கிறார். தமது தேசத்தின் பண நோட்டில் We trust in God என்று அச்சடித்து கடவுளின் ஆசீர்வாதத்தால் மிகவும் செல்வந்த நாடாக இருந்து கொண்டு இப்படியாக கூறலாமா? இதனைக் கிறிஸ்தவர்கள் எனக் கூறிக் கொள்ளும் நாம் எப்படியாக ஏற்றுக் கொள்ளமுடியும்? 1திமோ 6:10ல் பவுலடியார் தமது அன்பான உடனூழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதிய புத்திமதிகள் என்ன பதில் கூறப் போகின்றார்கள்.

பல வகையான அழிவுக்குரிய ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் முன்னணி வகிக்கும் அமெரிக்கா தேசத்தின் செயல்பாடு பற்றியும் கருத்துக் கேட்கப்பட்டது. தாம் அங்கம் வகிக்கும் United Church of Christ இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தாலும் வேறு சில சபைகள் பாராமுகமாக இருப்பதனையும் மறக்க முடியாது. என்கிறார். நமது தேசத்தின் ஜனாதிபதி இவைகளைக் குறித்து திருச்சபைகளின் ஏகோபித்த குரலுக்கு செவி சாய்க்க முடியுமோ என்பதிலும் அவர்களுக்கு சந்தேகமாகவுள்ளது. கிறிஸ்தவர்கள் எனக் கூறிக்கொள்ளும் முதலாந்தர நாடுகள் இப்படியாக ஏனைய நாடுகளை நசுக்க முயலுவது எவ்வகையில் ஏற்புடையது?. இப்படியானவர்களுடன்

ஒத்துப்போவது அல்லது பாராமுகமாக இருப்பது எவ்வகையில் நியாயமானது?. இப்படியான திருச்சபைகளும் நாடுகளும் வருங்கால சந்ததியினருக்கு எதைக் கூறப்போகின்றார்கள்? எவ்வகை நற்செய்தியை முன் வைக்கப் போகின்றார்கள்?

அமெரிக்க நாட்டிலிருந்து வந்த நற்செய்திப் பணியாட்கள் தான் எமது நாட்டில் புரட்சியை ஏற்படுத்த பலவிதமான சிரமங்களை அனுபவித்து வெற்றி கண்டார்கள் அதன் பலனை நாம் இப்போது அனுபவிப்பதையும் மறுக்க முடியாது. அதேவேளையில் எமக்கு நன்மையானவற்றை செயல்படுத்துவதற்காகத் தமது உடல், பொருள், ஆவிஅனைத்தையும் இழந்து கொடிய அரக்கனாகிய தீயோனின் பிடியில் நின்று விடுவித்த அந்த நற்செய்திப் பணியாளர்களுக்கு என்ன கைமாறு செய்யப் போகின்றோம? இதிலிருந்து தப்பிப்பிழைப்பதற்காக நாமே அந்நாடுகளுக்கு நச்செய்திப் பணியாளர்களாக செல்ல முயற்சிப்பதா? நாம் அங்கு செல்வதே முயற்கொம்பாக இருக்கும் இவ்வேளையில் அங்கு செல்லும் நம் நாட்டவர்களாவது அவர்களுக்கு இதனை எடுத்துக்கூற முடியாதா? அல்லது எரிகின்ற வீட்டில் பிடுங்கியது மிச்சம் என்னும் மனப்பாங்கில் வாழப்போகின்றோமா? செல்வாக்கு, பணம், ஆளுமை, அந்தஸ்து, இன்று வரும் நாளை போய்விடும். உலகில் நாம் வாழ்ந்தமைக்கு என்ன அடையாளத்தை வைத்து விட்டுப் போகப் போகின்றோம். மனிதனாகப் பிறப்பவன் எதையாவது சாதித்து விட்டுப் போகவேண்டும். இல்லை வெறுமையாக இவ்வுலகிற்கு வந்த நாம் வெறுமையாகவே இவ்வுலகைவிட்டு வெளியேற் போகின்றோம். இவ் உண்மையை நினைவில் கொண்டவர்களாகச் செயல்படுவோம்.

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வில்லை உய்வுண்டாம்**
**செய்நன்றி கொன்ற மவர்க்கு"**
**மனிதா நீ எங்கே போகின்றாய் ?**

**வண.பெ.ஜெயராஜா**



# இன்றைய சூழலில் நூல் நிலையங்கள்

பல்வேறு நூல்களும் சஞ்சிகைகளும் முறைப்படி சேகரித்து ஓரிடத்தில் வைக்கப்பட்டிருக்கும் அறிவுக்களஞ்சியம், நூல் நிலையங்கள் எனப்படும். நூல் நிலையம் தொடர்பானதுவக்கம் மிகவும் தொன்மையான காலத்தில் இருந்து தோற்றம் பெற்றது ஆகும். இதற்கு ஓர்நீண்ட வரலாறு உண்டு. நூல் நிலையம் தொடர்பான தேடலும் ஆர்வமும் அண்மைக்காலத்தில் பல தரப்பட்ட மக்களிடத்திலும் காணப்பட்டதன் காரணமாகவே இவ் ஆக்கம் இடம்பெறவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அத்தோடு எமது இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியினது நூல் நிலையமானது மேம்பாடு அடையும் இவ்வேளையில் இவ் ஆக்கம் பிரசுரமாவது மிகவும் பொருத்தமானதாக அமைகின்றது.

**நூலகங்களின் தோற்றம்:-**

தொன்மையான காலத்தில் முதன் முறையாக தோற்றம் பெற்ற நூல்நிலையம்பாபிலோனியாவில் கண்டெடுக்கப்பட்ட களிமண் பலகைகள் (clay tablet) ஆகும். இதன் காலம் ஏறக்குறைய கி.மு 2000 என அறியப்பட்டுள்ளது. இதே போல தமிழகத்திலும் களிமண் தகடுகளினால் எழுதப்பட்ட நூல்கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் உண்டு. பண்டைய கிரேக்கஆலயங்கள் ஒவ்வொன்றிலும் நூலகங்கள் இருந்தமைக்கு சான்றுகள் உள்ளன. குறிப்பாக கிரேக்கதத்துவஞானியான அரிஸ்ரோட்டில் தனக்கென சொந்தமாக பெரும் நூலகத்தை வைத்திருந்தார். என்று கிரேக்கப் பண்பாட்டு ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கிரேக்க பண்பாடு வளர்ச்சி பெற்ற அதே காலப்பகுதியில் தமிழகத்தில் "சங்கம்" என்ற அமைப்பு உயர்கல்விப்பீடமாக இருக்கிறது. இதே வரிசையில் அசீயா, பண்டைய எகிப்து உரோமாபுரி போன்ற நாடுகளிலும் நூல் நிலையங்கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவற்றிலே உரோமாபுரியில் அமைக்கப்பெற்ற நூல்நிலையங்கள் தொடர்பான அறிவு அனைவருக்கும் வேண்டப்பட்ட ஒன்றாகும். ஏனெனில் கி.பி 300 ல் ரோமாபுரியில் பொதுமக்களுக்கான நூல்நிலையங்கள் ஏறக்குறைய 30 இருந்துள்ளன. இவை பெரும்பாலும் கோயில்களிலே தான் இருந்துள்ளன. ஐரோப்பாவில் ரோம சாம்ராச்சியம் அழிந்த பின்னர் கத்தோலிக்க துறவிகள்மட்டுமே கல்வியிலும் , நூல்களிலும் அதிக அக்கறையுடையவர்களாய் இருந்தனர்.

பெனடிக்ரன்துறவிகள் கி.பி 530 ல் இத்தாலியில் மாண்டி கிறிஸ்டோ ஆபி என்ற மாதா கோயிலில் முதல் மடநூல் நிலையத்தை நிறுவினார். பின்னைய காலங்களில் ஒவ்வொரு மடத்திலும் நூல் நிலையம் அமைக்கப்பட்டது. இங்கிலாந்தில் முதன் முறையாக நூல் நிலையம் நிறுவியவர்களும் இத்துறவிகளே ஆவர்.

கி.பி 9ம் நூற்றாண்டளவில் ஐரோப்பாவிலே மிகவும் பிரபல்யம் பெற்ற நகரங்கள் ஒவ்வொன்றிலும் உயர்கல்விப்பீடங்களும், பல்கலைக்கழகங்களும், நூல்நிலையங்களைக் கொண்டிருந்தன. இவ்வாறான ஒரு சூழல் தோன்றுவதற்கு காரணம் என்னவெனில் ஐரோப்பாவில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கமே ஆகும். இதன் ஒரு கட்டமாக அச்சு முறை கண்டுபிடிக்கப்பட்டதும், நூல் நிலையங்கள் பெருகுவதற்கு முக்கிய காரணங்களாய் அமைந்தன. பிரிட்டனில் 1850ல் பாராளுமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட முதலாவது பொது நூல் நிலையச்சட்டத்தினால் அங்கு நூல்நிலையஇயக்கம் உண்டாகியது. இதே காலப்பகுதியில் தான் அமெரிக்காவிலும் நூல் நிலைய இயக்கம் ஆரம்பம் பெற்றது. இவ்விரு நாடுகளும் 19ம் நூற்றாண்டின் இறுதியில் நூல் நிலையக் காப்பாளருக்கான பயிற்சியை பல்கலைக் கழகங்களினூடாக வழங்கத் தொடங்கியது.

ஐரோப்பாவில் பரவலான முறையில் வளர்ச்சி பெற்ற கைத்தொழில் புரட்சியும் அச்சுப் பொறிகளின் கண்டு பிடிப்பும் சீர்திருத்த திருச்சபைகளின் (புரட்டஸ்தாந்து சபைகள்) பரந்து பட்டகல்விப்பணியும், பல்கலைக்கழகங்களின் தோற்றம் வளர்ச்சி போன்றவையும் நூல்களுக்கும்,நூல் நிலையங்களுக்குமான தேவைகளை அதிகரிக்கச்செய்தன. இங்கிலாந்தில் ஒவ்வொரு

## இலங்கையில் நூலகங்களின் வளர்ச்சி

எமது இலங்கைத்தேசத்தின் நூல்நிலையக்கல்வி தொடர்பான ஆரம்பமானது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சி புரிந்த காலத்தில் தோற்றம் பெற்று வளர்ச்சி காண முற்பட்டன. ஓவ்வொரு திருச்சபைகளிலும் நூலகம் அமைந்ததுடன் பாடசாலை நூலகமும் வளரத்தொடங்கியது. இதிலே செமினரி நூல்நிலையங்களின் வளர்ச்சியும் நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதனை அடுத்து பிரித்தானியர் எமது நாட்டை ஆண்ட காலப்பகுதியில் பொதுநூலகம், பல்கலைக்கழக நூலகம் என்பன வளரத் தொடங்கியது. சிறப்பாக அமெரிக்க மிஷனரிமார் வட்டுக்கோட்டை, தெல்லிப்பளை,உடுவில், உடுப்பிட்டி ஆகிய இடங்களில் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் நூலகங்களை நிறுவினார். இதனது தாக்கம் தற்போது வெளிப்பட்டு வருவது யாம் அறிந்த உண்மை ஆகும். அதே போல் அங்கிலிக்கன் திருச்சபையினர் சுண்டுக்குளியிலும், மெதடிஸ் திருச்சபையினர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும், ஹாட்லிக்கல்லூரியிலும் நூலகங்களை அமைத்தனர். கத்தோலிக்க திருச்சபையினர் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, இளவாலை, ஊர்காவற்றுறை போன்ற இடங்களிலும் நூலகங்களைஅமைத்தனர்.

கிறிஸ்தவ மிஷனரிமார்களின் கல்விப்பணியும் அதற்கு ஏற்றால் போல உருவாக்கப்பட்ட நூல் நிலையங்களும் ஒரு புறம் வளர்ந்தோங்குகையில் சைவப் பாரம்பரியத்தில் ஆறுமுகநாவலர் அவர்கள் நூலகப்பணியும், கல்விப்பணியும் ஆரம்பித்தார். இவரைத் தொடர்ந்து சேர்.பொன் இராமநாதன் அவர்கள் ஆண்களுக்கு பரமேஸ்வராக்கல்லூரியிலும், பெண்களுக்கு இராமநாதன் கல்லூரியிலும் நூலகங்களை அமைத்தார்.

## அண்மைக்கால முயற்சிகள்:-

கடந்த ஆண்டு தெல்லிப்பளையில் சிவத்தமிழ் செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகத்தை ஆரமபிக்கப்பட்டமையானது முக்கிய நிகழ்வாக உள்ளது. ஆய்வு ரீதியான அனைத்து செயற்பாடுகளும் இடம்பெறுவதற்கு இவ்ஆய்வு நூலகம் சிறப்பிடம் பெற்றுள்ளது. எமது

கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் நூலகமானது தற்போது புதுப்பொலிவுடன் விளங்கும் வகையில் வேலைத்திட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன. அண்மைக்கால வெளியீடுகளை உள்வாங்கி நூல்களின் எண்ணிக்கையைப்பெருக்கி வளாந்து வரும் சந்ததிக்கு ஏற்ற முறையில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அதேசமயம் ஆவணக் காப்பகம் ஆனது சிறந்த முறையில் உருவாக்கப்பட்டு வருகின்றது. இதன் ஊடாக கிறிஸ்தவம் சார்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அமையும். யாழ்ப்பாண பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத்துறையைச் சேர்ந்த மாணவர்கள் எமது நூலகத்திற்கு வருகை தந்து மிகவும் பயன் உள்ள வகையில் தமக்கு வேண்டிய தகவல்களைச் சேகரிக்கிறார்கள். இதன் ஊடாக எமது கல்லூரிக்கும் கிறிஸ்தவ நாகரீகத்துறைக்கும் இடையிலான உறவுமேம்பாடு அடைந்துவருகின்றது.

## நூலகத்தின் அவசியம்

மேற்கூறப்பட்டவாறு நூல்நிலையம் தொடர்பான வரலாறு ஆனது பரந்து பட்ட தன்மையுடன் வளர்ந்து இன்றுவரை வீறு நடைபோடுகின்றது. இன்றைய சூழ்நிலையில் நூல்நிலையம் தொடர்பான சில முக்கிய அம்சங்களை நாம் நோக்க வேண்டும்.

01. அறிவுப்பாரம் பரியம் தொடர்ந்து பேணப்பட கல்வித்துறையில் பொதுநூலகங்கள் உருவாக்கப்படுவது அவசியம்.
02. கல்வி முயற்சிக்குத்துணை செய்யும் வகையில் ஒவ்வொரு பாடசாலையிலும் நூல் நிலையங்கள் உருவாகுதல் வேண்டும்.
03. வாசிப்புப் பழக்கத்தை அனைத்து தரப்பட்ட மக்களிடத்தும் ஏற்படுத்தும் வகையில் கிராம ரீதியில் சனசமூக நிலையங்கள்,சேவை அமைப்புக்கள் ஊடாக நூல் நிலையங்கள் அமைக்கவேண்டும்.
04. வாசிப்பதினால் மனிதன் பூரணம் அடைகிறான் என்ற உண்மை வாக்கை நிறைவேற்றும் வகையில் வீடுகள் தோறும் நூல்களைச் சேகரித்து சிறிய அளவிலான நூலகத்தன்மை பேணப்பட வேண்டும்.

இத்தகைய கண்ணோட்டத்துடன் நூல்நிலையங்களின் பணிகள் குறிப்பிடுவது அவசியம். சமய சமூக அரசியல் பொருளாதார ரீதியில் மனிதன் முன்னெடுக்கும் முயற்சிக்கு நூலகத்தின் பணி துணையாக அமைய வேண்டும். அப்போது தான் நாட்டின் அபிவிருத்தியில் நூலகங்கள் சிறப்பிடம் பெற முடியும். இவ்வேளை எமது நாட்டின் இனப்பிரச்சினையினால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த 20 ஆண்டுகளில் நூலகங்களின் வளர்ச்சி மந்த நிலையில் இருப்பதை நாம் அனைவரும் அறிவோம். குறிப்பாக 1980 ம் ஆண்டு யாழ்ப்பாண பொது நூலகம் எரித்து அழிக்கப்பட்டமையானது எமது கல்வி மீது அறிவுத்தேடல் மீது இனவாதம் மேலோங்கிநிற்பது கண்கூடு. அழிக்கப்பட்ட நூலகம்மீண்டும் இன்று கட்டியெழுப்பப்பட்டாலும் தமிழ் மக்கள் பால் இழைக்கப்பட்ட வன்செயல் எத்தனையோ பெறுமதியான நூல்களை எரித்து அழித்த ஒரு பாதகச் செயல் தொடர்சந்ததியைகல்வி ரீதியில் வெறுமையாக்கியுள்ளது.

இந்நிலை கடந்து எமது நாட்டு மக்களின் முன் னேற்றமானது, கல்வி ரீதியில் இடம் பெற வேண்டுமாயின் சிறார் நூலகங்கள் ,தனியார் நூலகங்கள்,சமய நூலகங்கள் ,பாடசாலை நூலகங்கள் ,சிறப்பு நூலகங்கள், பல்கலைகழக நூலகங்கள், தேசிய நூலகங்கள், பொது நூலகங்கள் எழுச்சி பெற்று கல்விப்பசியை நீக்கி, அறிவுத்தேடலில் நாம் அனைவரும் ஈடுபட்டு நூலக வளர்ச்சிக்காக நாம் அயராது உழைக்க வேண்டும்.

**அருட்திரு.வி.பத்மதயாளன்**

# கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்

**" தம்மொரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு , அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்,** (யோவான் 3:16)

அன்பே கடவுள் - (ஆண்டவன்) என்பது, ஆன்றோர்கள் ஆழ்ந்து உணர்ந்துரைத்த பொன்மொழி. அன்பற்றவர்கள் அறிவிலிகள். - அன்புக்குட்படாத உயிர் எதுவுமில்லை அன்புடைய மனிதன் அன்புதனை அகத்தில் கொண்டு ஆற்றும் பணிகள் அளவிட முடியாதவை. இவ்வன்பின் ஆற்றலினை - அன்புச்சுடர் வள்ளலார் அழகாக நயம்பட நவிலுவதைக் காணுங்கள்.

**"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே**
**அன்பெனும் குடில் புகும் அரசே**
**அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே,**
**அன்பெனும் கருத்து அமர் அமுதே,**
**அன்பெனும் குடத்துள் அடங்கிடும் கடவே**
**அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே,**
**அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே**
**அன்புருவாம் பரமசிவமே** ; (கடவுளே)"

அன்புள்ளம் கொண்டோரிடம் இயற்கை முதல் இறைவன்வரை ஐக்கியமாகிவிடும் என்கிறார் - வள்ளலார் எனப்படும் இராமலிங்க சுவாமிகள். ( விவிலிய மறையில் 1 கொரிந்ரியர் 13ம் அதிகாரத்தை வாசித்து - ஒப்பிட்டு அன்பின் சிறப்பைச் சிந்தியுங்கள்.)

" **அன்பெனும் குடத்துள் அடங்கிடும் கடலே** " - இந்த வரியில் அன்பின் ஆற்றலை மிகத் துல்லியமாகத் துய்க்க முடிகிறது என்றால் வள்ளலார். அன்பின் ஆழத்தை அகழ்ந்திருக்கும் நிலையை உணர்ந்திட முடிகிறது. அன்பினால் வள்ளுவப்

பெருந்தகையும் மனித மனத்திற்கு இனபமளிப்பது. " அன்பு " ஒன்றேதான். பிறரிடம் அன்பு செலுத்தி வாழும் வாழ்க்கையானது, நாம் மனிடப் பிறவி அடைந்ததின் பலனை அடைந்து பெருவாழ்வு எய்தியவர்களாகின்றோம் என்பதை.

" **அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையத்து**
**இன்புற்றார் எய்துஞ் சிறப்பு** "

என அன்பின் சிறப்பை மிக்க அழகாக அறிவுறுத்துகின்றார். அன்பின் நிலையை நமக்கு ஆன்றோர்களும் - ஆன்ம ஞானிகளும் பண்டு தொட்டே வலியுறுத்தியுள்ளனர். திருமூலர் போன்ற பல பக்தர்கள் அன்பின் சிறப்பை தெளிவாகப் பாடியுள்ளனர் என்பதை அறிக. இயேசு பெருமான், அன்பின் உருவாய் இப்பூவுலகில் வாழ்ந்து அன்பைப் பற்றி அவர் கூறிய அறிவுரைகள் நமது சமூதாயத்துக்குப் புத்துயிர் அளிக்கும் என்பதை நாம் மறுக்கவியலாது. ஆண்டவனை அடைய ஒரேவழி அன்பு ஒன்றுதான் - என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டு, வள்ளல் பெருமான் ஆற்றிய அருட்பெருங் கருணையை என்னென்பது - அன்பே - இறைவன் என்பதை ஆன்மீக ஞானிகள் மிக்க அழகாக பசுமரத்தாணி போன்று நம்மனதில் பதிய வைத்துள்ளனர்.

அன்பு மனிதனை மனிதனாக்கும். இன்று நமக்குத் தேவை மனிதனை மதித்து நடக்கத் தெரிவதே - எந்த ஆன்மீகத் தத்துவர்களும் மனிதனை மனிதனாக்கும் நிலையில் பரிணமிக்கிறது என்பதை அறிக - அன்பு அற்ற உள்ளத்தில், வாழ்வில்லை, உண்மையொளி இல்லை, ஆற்றலை அளிப்பதில்லை, அன்புள்ளங்களில், புத்தொளியோடு உள்ளொளி உதிக்கச் செய்யும் - மனத்தூய்மை பெறும் வாழ்வு மேன்மையுறும் - அன்புள்ளம் கொண்டோரெல்லாம் பண்புள்ளம் கொண்டவர்கள் என்பதை வள்ளலார் வலியுறுத்துகின்றார். மேலும் வள்ளுவநாயனார் கூறுவது - " "உறுப்பொத்தல" மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு " (993) அதாவது மனிதனை மனிதனாக மதிக்கின்ற நல்மனம் இல்லாத ஒருவன் - தன்னலமே பெரிதாகக் கருதி மனிதனோடு மனிதனாக வாழ்ந்திருப்பதில் ஒரு பயனும் இல்லை. மற்றவர்கள்

மதித்து ஏற்றுக்கொள்ளும் விதத்தில் மனப் பண்புகள் பெற்றவனே மனிதன் என ஏற்கத்தக்கவன் என விளக்குகின்றார்.

இறுதியாக நமதாண்டவர் இயேசு பெருமான் கூறுவதைக் கவனிப்போம். " நான் உங்களிடம் அன்பு கொண்ட இருப்பதைப் போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை. தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோ 15:12,13) ஆண்டவர் அன்பைப் பற்றி வழங்கிய கட்டளைக்கு நாம் கீழ்படிகிறோமா? ஒருவரில் ஒருவர் அன்பு செலுத்தாதபடியால் தான் நமது சபைகளில், ஊழியர்கள் மத்தியில் கிறிஸ்தவ நிறுவனங்களில் ஆச்சிரமம், ஜெபவீடு போன்ற குழுக்களிலும் சாத்தானின் ஆதிக்கத்தை தீய செயல் களைக் காண்கிறோம் அல்லவா? ஆழமாகச் சிந்தியுங்கள்.

" **அன்பே பிரதானம் சகோதர அன்பே பிரதானம்** .

சகோ - ஜூட் எழிலமுதன்.

## திருமறையும் திருக்குறளும்

" **உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்,**
**உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்**"

(மத்தேயு 5:44)

" **இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்** "

(திருக்குறள் 314)

"**நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாத படிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்**"

(மத்தேயு 7: 1)

**தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்பிற்பின்**
**என்குற்றம் மாகும் இறைக்கு**

(திருக்குறள் 436)

# பாவம் என்றால் என்ன?

ஞானா

இன்று நமது சபைகளிலே அருள் தொண்டர்கள், நம்மைப் பாவத்திலிருந்துமீட்கவே இறைவன் தமது ஒரேபேறான குமாரனை இவ்வையகத்திற்கு அனுப்பிய நற்செய்தியைப் பறைசாற்றும் அருளுரைகளை வழங்கி வருகின்றனர்.

இருந்தும், இன்றும் பலர் - 'பாவம்' என்றால் என்ன? எது பாவம்? என்று வினாவுகின்றனர். இவ்வினாவிற்குச் சரியான விடை தெரியாமல் பல கிறிஸ்தவர்கள் குழம்பிய நிலையில் இருக்கின்றனர் பலர் முக்கியமாக, திருச்சபையை விட்டுப்பிரிந்து செயல்படும் குழுக்கள் - இந்த கேள்விக்குசரியான விடைகொடுக்காமல் ,மக்களின் மனங்களைக் குழப்புகின்றனர். பலர் பலவிதமான விளக்கங்களை கொடுத்துத் தடுமாறச் செய்கின்றனர்.

எனவே எது பாவம்? என்ற வினாவிற்குத் தெளிவான பதில் அளிக்கவேண்டியது அவசியம - பாவத்தின் நீண்ட பட்டியல்களைப் பலர் வழியாக அடிக்கடி கேள்விப்படுகிறோம். - கலாத்தியர் 5:19-21 இல் கூறப்பட்டுள்ள ஊனியல்பின் செயல்கள் பற்றி அடிக்கடி குருமார் தமது அருளுரைகளில் கூறி வருவதை நாம் அறிவோம். இவற்றுடன் அங்கு இடம் பெறாத தற்காலச்சூழலுக்கே உரித்தான புகைத்தல், வெற்றிலை சுவைத்தல் , திரைப்படம் பார்த்தல் ஆகிய பல பழக்கங்களும் பாவப்பட்டியலில் சேர்க்கப்படுவதுண்டு. அத்துடன் நாவல்கள் குமுதம், விகடன் போன்ற பத்திரிகைகளைப் படிப்பதையும் தவறெனக் கொள்வோரும் உண்டு. நகைச்சுவையாகப் பேசி மகிழ்வதுங்கூட பாவமென எண்ணும் கிறிஸ்தவர்களும் இருக்கின்றனர்.

அதே வேளையில் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் தீங்கிழைக்கும் பல செயல்கள் கிறிஸ்தவர்கள் பலரின் பாவப்பட்டியலில் இடம் பெறாதிருப்பதையும் காண்கிறோம். மனிதனை மனிதனாக ஏற்க இடமளியாத சாதிப்பிரிவினை - அயலார் பட்டினி கிடக்கத் தேவைக்கு மிஞ்சி பொருட்களைச் சேர்க்கும் பேராசை- பெண்களைத் தங்களிலும்

தாழ்ந்தவர்களாகக் கருதி நடத்தும் ஆண்களின் ஆதிக்கம்- வியாபாரத்தில் காணப்படும் ஏமாற்று அரசியலில் காணப்படும் நேர்மையின்மை - பிறர் எக்கேடு கெட்டுப் போகட்டும், நானும் என் குடும்பமும் வாழ்ந்தால் போதும் என்னும் தன்மைக் கண்ணோட்டம் போன்ற பல செயல்கள், தங்களை மெய்க்கிறிஸ்தவர்கள் என்று எண்ணி இருந்திருக்கின்றோர்க்கும். பாவங்களாகத் தெரிவதில்லை இவற்றைப்பற்றி பிரசங்க மேடைகளில் குருமார் அதிகமாக கூறுவதாகத் தெரிவதில்லை. அப்படி யாராவது பேசினால், அது பற்றி பிரசங்கமாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.- சமூக சீர்திருத்தப்பிரசங்கமாகக் கொள்ளப்பட்டு ஒதுக்கி விடப்படுகிறது.

## எது பாவம்?

### ஒரு செயல் எப்பொழுது எதனால் பாவமாகிறது?

இது ஒவ்வொரு மனிதரும் ஆய்ந்து அறிய வேண்டிய ஓர் உண்மை. இவ்வினாவிற்குரிய விடையை நாம் சரிவரப் புரிந்து கொண்டால், பாவம் இன்னதென்று அறிய நாம் பிறரின் அருளுரைகளுக்காக காத்திருக்கத் தேவையில்லை.- பாவப் பட்டியல்களைத் தேடவேண்டியதுமில்லை. எது பாவம் என்பதை இறைவனே (ஆவியானவரே)நமக்கு உணர்த்துவார். இறையருளால் நாமே நம் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் நம் செயல்களை ஆராய்ந்து அறியலாம்.

பாவத்தின் தோற்றத்தையும் அதன் விளைவுகளையும் பற்றித் திருமறையில் ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்தில் மட்டுமே காணலாம். இப்பகுதி கிறிஸ்துவுக்கு முன், ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. ஆயினும் இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மைகள் பல, இன்று நமக்கு இறைவனுடைய விருப்பத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இங்கு பாவம் என்றால் என்ன? பாவம் எப்படி மனித வாழ்க்கையில் புகுகின்றது? அதன் விளைவுகள் என்ன என்ற பல உண்மைகள் விளக்கம் பெறுகின்றன.

பாவம் என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச்சொல் (ஹட்டா) "குறிதவறல்" - "இலக்கை விட்டுப் பிறழ்தல் "என்று பொருள்படும்." பாவம் என்றால் என்ன? என்பதற்கான விடையை இச்சொல்லே சுருக்கமாகத் தருகிறது. இறைவன் நம்மில் எதிர்பார்க்கும் வாழ்க்கையின் இலக்கை விட்டுப்பிறழ்தலே "பாவம் "வாழ்க்கையின் இலக்கை விட்டு மனிதர் பிறழ்வதற்குகாரணமாய் அமைவதென்ன?

கடவுளைப்போலாக வேண்டும் என்று உள்ளத்தில் எழும் ஒரு சோதனை என்கிறார். "வீழ்ச்சி" ( பாவம் ) வரலாற்றை எழுதிய பக்தன் உளவியல் அடிப்படையிலான ஒரு உண்மையை இது விளக்குகிறது. அனைத்தையும் படைத்தவர். அனைத்தும் அறிந்தவர் . இன்பமயமானவர் கடவுள் என்பது நமது நம்பிக்கை. எவ்வளவு தான் உண்டாலும், அடைந்தாலும், அறிந்தாலும், அனுபவித்தாலும் நிறைவு பெறாத மனித உள்ளம். கடவுளைப்போலாக வேண்டும் என்று மனிதருள் எழும் ஒரு சோதனையையே காட்டுகிறது. " என்கிறார் போல் திலிக் என்னும் இறையியல் அறிஞர்- இந்த உந்துதல் வரம்பற்று, தேவைக்கு மிஞ்சி கட்டுப்பாடற்ற தன் வாழ்வையும் அழித்து பிறர் வாழ்வும் பாதிக்கப்படுமளவிற்குச் செயல்படும்போது அது பாவமாகிறது. இந்த உண்மையை "வீழ்ச்சி" வரலாறு விளக்குகிறது.

இந்தச் சோதனைக்குக் காரணமான கனியைக் குறித்த முக்கிய உண்மைகளைக் காண்போம்.

(01) புசிப்பதற்கு நல்லதாக-

(02) பார்வைக்கு இன்பமாக

(03) இச்சிக்கப்படத்தக்கதாக (புத்தியை தெளிவிக்கிற) இதனை-

(2) உடல் சார்ந்த

(3) கலை சார்ந்த

(04) அறிவு சார்ந்த இன்பம் எனக் குறிப்பிடலாம்-மக்களைக் கவரும் மூன்று வகையான இன்பங்கள்.

(01)உடல் இன்பம், (02)கலை இன்பம் (03) அறிவின்பம் என்பனவாகும்.

எனவே தவறு செய்யத்தூண்டும் எந்தப்பொருளும் நம்மைக் கருதுவதாக உள்ளது. நம்மைப் பாவத்திற்கு உள்ளாக்கும் எந்தப்பொருளும் எளிதில் கிடைக்கக் கூடியதாக உள்ளது.எட்டாத ஒரு பொருளுக்காகவோ, கிட்டாத ஒரு இன்பத்திற்காகவோ நாம் எந்தச்செயலிலும் ஈடுபடுவதில்லை. தவறான ஒரு விருப்பு, செயலாக மாறும் போது தான் பாவம் பிறக்கிறது. ஒரு முறைதவறு செய்யத்துணிந்த பின் அத்தவறுக்கு நாம் அடிமையாவதால் சாதகமற்ற சூழ்நிலைக்குள்ளும் வெளியரங்கமாகவே நாம் தவறுகளைச் செய்யத் தூண்டப்படலாம்.

பாவத்தின் கொடிய விளைவுகளும் இங்கு விளக்கப்படுகின்றன. நம் பாவம் பிறரையும் பற்றுகிறது என்ற உண்மை, ஏவாள் கனியை ஆதாமுக்கு கொடுத்தாள் என்ற பகுதி விளக்குகிறது.- பாவம் முதல் செய்தவரையே பாதிக்கிறது. பாவம் செய்தவர் தனக்குள்ளேயே பிளவுறுகிறார். தன்நம்பிக்கையும் சுயமரியாதையும் இழந்து தன் ஆளுமையை இழந்து ஒரு போலியாக உருவாகிறார். இருவரும் வெட்கி அத்தி இலைகளால் தங்களை மறைத்துக் கொண்டார்கள் என்ற பகுதியின் கருத்து இதுவே.

கடவுளுக்கு மறைவாக ஆதாமும் ஏவாளும் ஒளித்துக்கொண்டனர் என்ற பகுதி, பாவம் கடவுளிடமிருந்து நம்மைப்பிரிக்கிறது என்பதற்குச் சான்றாகும். ஆதாம், தன் தவறை மறைக்க ஏவாளின் மேல் பழியைப் போடுகிறான் - ஏவாள் பாம்பைக் குறை கூறுகிறாள். இவ்வாறு ஒவ்வொருவரும் உறவுகளை முறித்துக்கொள்கின்றனர்.- பாவம் சமூகத்து உறவையும் இயற்கையுடன் உள்ள தொடர்பையும் பாதிக்கிறது. என்ற உண்மை இங்கு விளக்கப்படுகிறது.

எனவே "எது பாவம்?" என்ற வினாவிற்கு, இந்த வீழ்ச்சி வரலாறு விடைகளைத் தருகின்றது.

(01) நமது சொந்த வாழ்க்கையைப் பாதிக்கும் ஒரு செயல் பாவமாகிறது.

(02) நமக்கும் இறைவனுக்கும் உள்ள உறவைப் பாதிக்கும் ஒரு செயல் பாவமாகிறது.

(03) பிறர் வாழ்வை, அல்லது நமது சமூக உறவுகளைப் பாதிக்கும் ஒரு செயல் பாவமாகிறது.

(04) இயற்கையோடுள்ள உறவைப் பாதிக்கும் ஒரு செயல் பாவமாகிறது.

மேற்கூறிய அடிப்படையில் நமது செயல்களை நிதானித்து அறியும் போது , நாம் செய்வது பாவமா இல்லையா என்பது தெரியவரும்.

**உண்பது பாவமா?**

அவ்வாறு ஒருவரும் கூறுவதில்லை, ஆனால், தேவைக்கு மிஞ்சி உண்பது(பெருந்தீனி) பாவம் எனப்படுகிறது. ஏனெனில், முதலாவது அது நமது சொந்த சுகத்தை பாதிக்கிறது. இரண்டாவது அது பிறரைப் பாதிக்கிறது. நாம் தேவைக்கு மிஞ்சி உண்பதால் பிறிதொருவர் உணவை அபகரித்து அவரைப் பற்றாக்குறையால் வேதனையுறச் செய்வதேயாகும். ஒருவன் தன் சுகத்தையும் கெடுத்து தன் ஏழைக் குடும்பம் வறுமையால் வாடுமளவிற்குத் தன் பணத்தை மதுவிற்காகச் செலவிடும் போது, மது அருந்துதல் பாவமாகிறது.

திரைப்படம் பார்த்தல் தன்னில் தானே பாவமல்ல., ஆனால் ஒருவர் தன் கடமையில் தவறி, தன் கல்வி அல்லது தொழில் பாதிக்கப்படுமளவிற்குத் திரைப்படத்திற்கு அடிமையாகும் போது அது பாவமாகிறது. புகைத்தல் உடலுக்குக் கெடுதி தருவது என்று விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் ஒருங்கே கூறும்போது மேற்கூறிய அடிப்படையில் ஒருவர் அதில் ஈடுபடுவது பாவமே. மேலும் தவறான பாலியல் உறவுகள், இலஞ்சம் வாங்குதல், கொடுத்தல் பிறரை ஏமாற்றுதல், பள்ளிக்கூட தேர்வு நடக்கும் போது பார்த்தெழுதல்,பிறர் பொருளை திருடுதல், ஆகிய செயல்கள்யாவுமே இந்த அடிப்படையில் பாவங்களாகின்றன. இவை நம் வாழ்க்கைக்கு தீங்கிழைப்பதோடு பிறர் வாழ்க்கையையும் பாதிக்கின்றனவாக அமைகின்றன.

இத்தகைய தனியார் பாவங்கள் தவிர, சமூக அளவிலும், தேசிய அளவிலும், அனைத்துலக அளவிலும் பல பாவச்செயல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எத்தகைய பாவங்களுக்கு மனிதர் கூட்டுப்பொறுப்புள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.? எடுத்துக்காட்டாக, ஏழைகள் அகதி முகாம்களில் இருக்கும் மக்கள் ஆகியோர்க்கும் கொடுப்பதற்கும் போதுமான உணவு வாய்ப்புக்கள் தம்மத்தியில் உண்டு என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வர். ஆனால் பெருவாரியான மக்கள் பட்டினியால் வாடும் நிலைமை நிலவி வருகிறது. – காரணம்? திரளான செல்வங்களை ஒரு சில மக்கள் குவித்து வைத்திருப்பது ஒரு காரணம்.-அப்படி ஒரு சிலருக்கு சாதகமான சூழலை வகுத்தளித்துள்ள நம் சமூக பொருளாதார அமைப்பு அடுத்த காரணம் இத்தகைய சமூக அமைப்புக்களை மாற்றாது. இயற்கையில் மறைந்து கிடக்கும் செல்வங்களை தக்க முறையில் பயன்படுத்த வழி வகுக்காது,

காலத்தைக் கடத்தும் அரசியல் அமைப்பு பிறிதொரு காரணமாகும். - சிந்தியுங்கள் இறைவன் பல்லாயிரம் தலை முறைக்குப் போதுமான தாதுப் பொருட்களையும் உணவுப் பொருட்களையும் இயற்கையில் நமக்குத் தந்துள்ளார். விஞ்ஞான தொழில்மய அறிவும் அனுபவமும் பெற்ற மனிதர் தம் பேராசையால் இன்று இயற்கையின் செல்வங்களை அளவுக்கு மிஞ்சி சூறையாடுவதால் இயற்கையுடன் மனிதருக்குள்ள உறவு பிளவுபடுகிறது எனலாம்.

காலநிலை உலக அளவில் மாறுபட்டு வருகிறது. இதற்குக் காரணம் அடிக்கடி நடத்தப்பட்டு வரும் கட்டுப்பாடற்ற அணுசக்தி பரிசோதனைகளாக இருக்கலாம். என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். கடலினுள் நடத்தப்படும் சோதனைகளாலும் கப்பல் போக்குவரத்தால் ஏற்படும் கழிவுப்பொருட்களாலும் கடல்நீர் அசுத்தமடைந்து வருகிறது. அதனால் மீன்களே இல்லாத (சவக்கடல் போன்ற)கடல்கள் விரைவில் உருவாகலாம். என்று ஆய்வாளர்கள் அஞ்சுகின்றனர். தொழிற்சாலைகள் ஊர்திகள் விமானங்கள் ஆகியவற்றின் புகையிலும் எரிபொருள் கழிவுகளிலும் விண்வெளி நாளுக்கு நாள் அசுத்தமடைந்து வருகிறது.

தொழில் முன்னேற்றமடைந்துள்ள மேல்நாட்டு மக்கள் சுவாசிப்பதற்குச் சுத்தமான காற்றைத் தேடி அலையும் காலம் வந்துவிட்டது. காடுகள் அழிக்கப்பட்டு காட்டுச்செல்வங்கள் மறைந்துவருகின்றன. ஆகையால் இயற்கை தரும் மழைச்செல்வம் குறைந்து வருகிறது. இத்தகைய செயல்களும் பாவங்களே, இவை மனுக்குலத்தின் கூட்டுப்பாவங்களின் விளைவுகள் எனலாம். இவை ஒரு வேளை நம் தலைமுறையில் நம்மைப் பாதிக்காமல் இருக்கலாம். ஆனால், இவை வருங்காலத் தலைமுறைகளைப் பெருமளவில் பாதிக்கும். ஆகையால், இச்செயல்களைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க அழைக்கப்படுகிறோம்.

எனவே, பாவம் என்பது " செய் ", " செய்யாதே " என்று யாரோ , என்றோ வகுத்த கட்டளைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படவேண்டிய ஒன்றல்ல. இறைவன் அருளியஉறவுகளின் அடிப்படையில் இன்று நிதானித்து அறியப்படவேண்டியவை. நம் உறவுகளையும் செயல்களையும் ஆய்ந்து அறியத்திருமறையும் , நம் இறையுறவும் துணையாக அமைகின்றன. திருமறை வெளிப்பாட்டின் வெளிச்சத்தில் விசுவாச வாழ்க்கையின் அடிப்படையில் நாம் சிந்தித்து செயல்பட அழைக்கப்படுகிறோம்.

நாம் செய்யப்போகும் ஒவ்வொரு செயலையும் பின்வரும் வினாக்களின் அடிப்படையில்ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். நான் செய்யப்போகும் இந்தச் செயலால்,

(01) என்னுடைய சொந்த வாழ்க்கைக்குப் பயன் ஏற்படுமா?
(02) என்னுடைய பக்தி வாழ்க்கைக்குப் பயன் ஏற்படுமா?
(03) பிறருக்கு நன்மை உண்டாகுமா?
(04) சமூகத்தோடும் இயற்கையோடும் உள்ள என் உறவுகள் நலம் பெறுமா?

மேற்கூறிய வினாக்களுக்கு "ஆம் " என்று விடைதரக்கூடிய செயல்கள் பாவமற்ற செயல்கள் என அறிக.

மாறிவரும் மனித வாழ்க்கையில் நடைமுறை வாழ்க்கைத் தரவுகளும் நாகரீகமும் கூட மாறி வருகின்றன. இந்த

தரவுகளையும் நாகரீகத்தையும் மேற்கூறிய அடிப்படையில் ஆராய்ந்து அறியவேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு. "உன் வாழ்வை அழகுறச் செய்ய முடியாவிட்டால் அதைச் சீரழிக்காமலாவது இரு" என்றார் ஓர் அறிஞர். நம்முடைய வாழ்வையும் அழகுபடுத்தி, பிறர் வாழ்வையும் அழகுறச்செய்யும் வாழ்க்கை வனப்பையே "நாகரீகம்" என்பதாகும். நம்முடைய வாழ்க்கைத்தரவுகள் எமது சொந்த நலத்தை மட்டும் அடிப்படையாக கொண்டதாக இராமல் பிறர் நலத்தைப் பாதுகாப்பதாகவும் அமைய வேண்டும். தன்னிச்சைப்போக்கு தலைதூக்கி நிற்கும் மேல்நாட்டு நாகரீகத்தில் இந்த உண்மையை சிலர் மறந்து நிற்பதை நாம் வருத்தத்தோடு கவனிக்கிறோம்.

பிறரை வாழச்செய்து, நாமும் வாழ்வதே (வாழ்வது போல் நடிப்பதல்ல) மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கை, அத்தகைய வாழ்க்கையில் நம்சார்ந்தவாழ்க்கையையும், பிறர் வாழ்க்கையையும் கெடுக்கச்செய்து இறையுறவிலிருந்து நம்மை விலக்கும் பாவச்செயல்களுக்கும் இடமே இராது.

பாவம் என்றால் என்ன? என்ற வினாவிற்கு தகுந்த விடை இங்கு கண்டு பிடித்துவிட்டீர்களா? உங்கள் எண்ணங்களை எழுதுங்கள்.

## மௌன செபம்

**ஆண்டவரே, எல்லாவற்றையும் சொல்லவல்லதாம் அம்**
**மௌன மொழியைக் கற்றுத்தாரும்,**
**உம் சமூகத்தில் என் உள்ளம் அமைதியாய் இருந்தது**
**உம்மைப் போற்றிடும் நெறியைக் கற்பியும்**

**வாழ்கையின் சூழ்நிலை நின்று உம்மிடமிருந்து**
**வருவனவற்றுக்காய் காத்திருக்க அருள்தாரும்**
**உம் சித்தம் ஒன்றே நடந்தேற வேண்டும் என்பதை மட்டுமே,**
**உம்மிடம் கேட்கும் திறனை அருளிச் செய்யும்**

**உமது செயல்களுக்கு அடங்குவோனாக எப்போதும்**
**அமைதியாய் இருக்க அருள்தாரும்,**
**சொற்கோவையாக அமையாமல் யாவற்றையும் அமைதியில்**
**உமக்குத் தெரிவிக்கும் அந்த செபத்தை நீர்**
**எனக்கும் கற்றுத்தாரும் சுமரம்.**

ஆமேன்

# கிறிஸ்மஸ் தரும் செய்தி என்ன?

மீண்டும் ஒரு முறை கிறிஸ்மஸ் காலம் வந்து விட்டது. கிறிஸ்தவர் மனங்களில்மகிழ்ச்சி, வீடுகளில் அலங்காரம் மற்றும் பணியார ஆயத்தங்கள், ஆலயங்களில் கிறிஸ்மஸ்தினத் தொடர் கொண்டாட்ட நிகழ்ச்சி நிரல்கள், நிகழ்வுகள் மாநகர்களில் மாபெரும் மலிவுவிற்பனைகள் இவையெல்லாம் ஆரம்பமாகத்தொடங்கி விட்டன. ஆனால் கிறிஸ்மஸ் தரும் உண்மைச்செய்தியினை உள்ளத்தில் உணர்ந்து கொண்டோமா நாம்?

அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றி தீவனத்தொட்டியில் கிடத்தியிருப்பதைக்காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம் என கிறிஸ்துவின் பிறப்புப்பற்றிய செய்தி இடையர்களுக்கு முதன் முதலில் வானதூதரால் அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்டது மட்டுமல்ல உடனே விண்ணகத்தூதர் பேரணி அந்தத்தூதருடன் சேர்ந்து உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக, என்று கடவுளைப் புகழ்ந்தது.

இறைமகன் பிறப்பின் செய்தி இடையர்களுக்கு முதன் முதலில் அறிவிக்கப்பட்டதன் நோக்கமென்ன? ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும் உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும் , கட்டுண்டோருக்கு விடுதலைத் தெரிவிக்கவும் அனுப்பப்பட்டவர் ஆகையால் தான் இரவிலும் கண்விழித்து கிடையைக் காக்கும் இரவின் காவலர்களுக்கு, இறைமகனின் பிறப்பின் செய்தி நற்செய்தியாக அறிவிக்கப்பட்டது. உழைக்கும் மக்களின் உண்மைப்பிரதிநிதி உத்தமர்

இயேசுவே என்ற காரணத்தால்தான் உழைக்கும் மக்களாகிய இடையர்களுக்கு உத்தமர் இயேசுவின் பிறப்பு உரிமையுடன் உரைக்கப்பட்டது. துன்புறும் மக்களின் துயரத்திலும், பாடுபடும் மக்களின் பாடுகளிலும் பங்கு கொள்ளும் பார்வேந்தன் இயேசு என்பதனால் தான் பார்வேந்தனின் பிறப்பின் செய்தி இடையர்களுக்கு முதன்முதலில் சொல்லப்பட்டது. எனவே கிறிஸ்மஸ் தரும் செய்தி என்ன? துன்பத்திலும் துயரத்திலும், அடக்குமுறையினாலும்,தடுக்குதலினாலும் உழலும் மக்களுக்கு இன்பத்தை - அமைதியை ஏற்படுத்தும் செய்தியைக் கொண்டிருப்பதேயாகும் இதனை எவ்வாறு செயல்படுத்தலாம் என்பதை ஆராய்ந்து செயலாற்றுவதே கிறிஸ்மஸ்.

இறைமகன் கிறிஸ்துவின் பிறப்பு இடையர்களுக்கு முதன் முதலில் அறிவிக்கப்பட்டது. அவர்கள் விரைந்துசெயற்பட்டார்கள். அர்த்த இராத்திரியிலும் அடையாளத்தை நோக்கி ஆவலுடன் சென்று குழந்தையைக் கண்டு, பின் தாம் கண்டவற்றையும், கேட்டவற்றையும் செய்தியாகத் தெரிவித்தார்கள். கடவுளைப் போற்றிப்புகழ்ந்து பாடிச் சென்றார்கள். எனவே கிறிஸ்மஸ் தரும் செய்தி என்ன? இதனை விரைந்து செயற்படுதலாகும். ஆண்டவரை அறிவிக்கவும், அவர் தம் வார்த்தையை எடுத்துரைக்கவும், அவரைப் போற்றிப்புகழவும் விரைந்து செயற்படுமாறு கிறிஸ்மஸ் நமக்கு அழைப்பு கொடுக்கிறது. கிறிஸ்மஸ் தரும் மேலான செய்தி இறைவன் மனிதனானான் என்பதேயாகும். இறைவன் தன் மேன்மையைத்துறந்து " ஏழைக்கோலமானார் "; "தரித்திரரானார்" மனுக்குல மாந்தராகிய நாம் மேன்மைத்தன் மையை நாடும் போது, இறைவன் மனுமகனானார். எனவே கிறிஸ்மஸ் தரும் செய்தி மேன்மையை நாடாது, மனத்தாழ்மையை, உளத்தூய்மையை நாடும் உணர்வைப் பெற்றுக் கொள்வதேயாகும்.

இன்று நம் தேசத்திற்கு கிறிஸ்மஸ் தரும் செய்தி யாது? என்று சிந்திக்கும் போது அன்று ஏசாயா தீர்க்கன் உரைத்த இறைவாக்கு இன்று எம் தேசத்திற்கும் கிறிஸ்மஸ் செய்தியாக

தரப்படுவதை உணரலாம். ஆம் நெடுங்காலமாய் இடிந்து கிடந்தவை கட்டி எழுப்பப்படும்.; முற்கால முதல் பாழாய்க் கிடந்தவை, நிலை நிறுத்தப்படும். தலை முறை தலை முறையாக இடிந்துஅழிந்து கிடந்த நகர்கள் சீராக்கப்படும் என்றவாக்கும்; அவமானத்திற்குப் பதிலாக இரு பங்கு நன்மையடைவீர்கள். அவமதிப்புக்குப் பதிலாக உடைமையில் மகிழ்வீர்கள். நாட்டில் உங்கள் செல்வம் இருமடங்காகும். முடிவில்லா மகிழ்ச்சி உங்களுக்குரியதாகும். என்று எசாயா தீர்க்கனுரைத்த தீர்க்க தரிசன வாக்கு இறைமகன் கிறிஸ்துவின் பிறப்பிற்கூடாக எமக்கும் கிறிஸ்மஸ் செய்தியாக உரைக்கப்படுவதை நாம் உணரலாம்.

எனவே கிறிஸ்மஸ் நாம் நமது ஆண்டவரில் பெருமகிழ்ச்சியடையவும். எங்கள் கடவுளில் எமது உள்ளம் பூரிப்படையும் நன்னாளாகும்.

அருட்திரு.டி.எஸ்.சொலமன்-

## இன்றைய இறையியல் - அறைகூவல்கள்

இன்றைய சூழலைக் கூர்ந்து நோக்குங்கால், அனைத்து வினாக்களுக்கும் அடித்தளமாய் அமைந்த வினா - "மனிதன் யார்?" என்ற வினாவே. ஆகவே இன்றைய இறையியல் இவ்வினாவோடு தனது சிந்தனையைத் துவங்க வேண்டும் துவங்குகிறது.

இந்திய இறையியலாளர் எம்.எம் தொமஸ், அனைத்துச் சமயங்களும் கொள்கைகளும் சந்திக்கும் இடமாக இவ்வினாவைக் கண்ட காரணத்தால் தாம் எழுதிய நூலுக்கு - "Man in the Universe of Faiths" என்ற தலைப்புக் கொடுத்துள்ளார். தமது நூலில் எவ்வாறு மனிதன் யார்? என்ற வினாவின் வழியே அனைவரும் ஒன்றுபட இயலும் எனக் காட்டுகின்றார் - மணிலாவில் நடந்த அனைத்து ஆசிய இறையியலாளரின் மாநாட்டில் "Man and the Holy – Man in the society and History – Man in Future என்ற பொருள்களே ஆய்வுகளில் மைய இடம் பெற்றன.

கிறிஸ்தவ இறையியலாளர்கள் மனிதன் யார்? என்ற வினாவிற்கு விடை காண முயலுகையில், கிறிஸ்தியல் பற்றிப் பேசாமல் இருக்க இயலாது. எனவே கிறிஸ்தியல் இன்று சிறப்பிடம் பெறுகிறது, அதிலும் விண்ணின்று துவங்கும் கிறிஸ்தியல் அல்ல. மண்ணின்று மலரும் கிறிஸ்தியலே இன்றையத் தேவை W Pannenberg, J.Moltman, போன்றவர்களின் நல்லெதிர் நோக்கு இறையியலும் Norman Hook G.W. Lampe போன்றவர்களின் ஆவியர் கிறிஸ்தியலும் இம் முயற்சியால் எழுந்தவை எனலாம்.

# நற்சிந்தனை

(நமது திருமறையில் "நீதிமொழிகள்" நூலிலிருந்து
நல் முத்துக்களை உங்கள் சிந்தனைக்காக
தரப்பட்டுள்ளது.-வாசித்து சிந்தித்து பயன்பெறுங்கள்)

* *அறிஞனின் சொல் - அரியமுத்துக்கள்*

பேரறிஞர் வாயில் பிறக்கும் பெரும்சொல்லே
சிரிய ஆணிமுத்துச் செல்வங்கள் – கூரறிவாய்
அருளுவாய் கோப்பாய் அழகாய் அகத்தணிந்து
கொள்ளுவாய் பூரிப்பே கொண்டு

*(நீதி : 8:11)*

* *பெற்றோர்க்கு அடங்காதவன் மூடன்*

பெற்றோர் தன் நல்லுரையைப்பேணாது எதிர்ப்பவன்
முற்றிலும் மூடனே: முன்னேறான் –மாற்றுங்காண்
ஐந்திலே கோணியது ஐம்பதிலே நேர் உறுமோ
பிஞ்சிக்கெட்டால் வீழும் பிய்ந்து

–(நீதி 15:5,10,20)

* *நண்பனுக்குத் தீங்கு நேரிடின்*

(மரத்தில் வெட்டுக்காயப்படின் மரப்பட்டை உட்பாகத்தில்
கசிந்து ,பிசின் எனும் கண்ணீர் வடித்துக்காயத்தைச்
சுற்றிப் படிந்து மூடி இருந்து காயம் ஆற்றும் அது போல)
நண்பனுக்குள்ள நலிவு இழிவை மாற்றுவதே
பண்புள்ளோர் செய்கையாம் பற்றுதலாம்–புண்பட்டு
வெட்டுண்ட மாமரப்பட்டை பிசின் கனிந்து
கட்டுண்டு காத்து ஆற்றும் தண்டு

–(நீதி 17:9)

* *ஏழைக்கிரங்கல்*

ஏழையை எள்ளியோன் ஈசனை எள்ளியதால்
பீழை பெருமிடும்பை பெற்றிருப்பான் – ஏழைக்கு ஒன்று
ஈந்தவன் ஈசனுக்கு ஈந்தானன்: இவ்வுலகில்
சேர்ந்தனன் எய்ப்பினில் வைப்பு

(நீதி : 17:5)

✸ *அறிஞனுக்கும் மூடனுக்கும் – அறிவித்தல்*

நுண்ணுணர்வு அற்றோனை நூறாய்ப் புடைத்தாலும்
எண்ணம் தெளிவுறான் ஈடேறான் – நுண்ணறிஞன்
கண்ணினால் நோக்கறிந்து காரியங்கள் ஆய்ந்துணர்ந்து
பண்ணுவான் பண்பு வழிப்பட்டு.

(நீதி : 17.10)

✸ *மூடனொரு பழகேல்*

குட்டி பறி கொடுத்த கோபக் கரடிமேல்
முட்டிக் கொளல்தனி மூடமாம் – கெட்ட
கயமையுள் மூழ்கிக் கிடப்போன் முன் செல்லல்
பயமின்றித் தீயுள் விழல்

(நீதி : 17:12)

✸ *தீங்கு செய்யா நாள் சிலருக்குப் பிறவா நாள்*

ஊக்கமாய்த் தீங்குகள் உற்றர்க்குச்செய்யாரேல்
தூக்கமே கொள்ளாதவர் உள்ளார் – நீக்கமறத்
தாள் நோகச் சென்று தடை தீமை செய்யாத
நான் பிறவா நாளாம் அவர்க்கு

(நீதி : 4:16)

✸ தீங்கு செய்யாவிடில் தூங்கார் சிலர்

எப்படியும் நாள்ஒன்றுக்கு(கு) இன்ன(ல்) ஒன்று செய்வதுவே
செப்பொண்ணா ஆறுதலாம் சிற்சிலருக்கு – இப்பாரில்
எப்படியோ தீயவினைகிங்கொருநாள்செய்யரேல்
துப்புரவாய்த் தூங்கார் துடித்து.

(நீாதி 4:16)

எண்ணத்தை ஒருமைப்படுத்தினால்

(சூரியனின் கதிர்களைச் சிதறவிடாமல், ஒரு குவி ஆடியுள் செலுத்தி, ஓரிடத்தில் குத்து ஒன்றாக்கிப் பஞ்சின்மேல் விழ வைத்தால் – நெருப்பு உண்டாகும் )

ஒருமையுள்ள சிந்தனையை ஒன்றாக்கிக் கண்டால்
பொருஷ் சுடரைக் கண்டின் புறலாம் – ஒருமையாய்
அடியுள் வெய்யோன் அருங்கதிரை உய்த்திட்டால்
கூடி எரி உண்டாக்கும் கூர்ந்து.

(நீதி : 19: 21)

# சிறுவர் பகுதி

## இறைவன் மனுருவானார்

கிறிஸ்து பெருமான் இம் மண்ணகத்தில் வந்துதித்த நிகழ்வை நினைந்து கொண்டாடும் பண்டிகையே கிறிஸ்மஸ் அல்லது நத்தார் விழாவாகும். விண்ணகத்தில் அரியணையில் வீற்றிருக்கிறவர் - அனைத்துலகிற்கு ஆசீர்வாதமாய்த் திகழ அமைதியின் மன்னனாய்ச் செயல்பட இவ்வையகத்தில் வந்துதித்த இம்மாபெரும் நிகழ்வை உளமாரக் கருத்துடன் கொண்டாட அழைக்கப்படுகின்றோம்.

உலகின் பலநாடுகள் - இயேசுபிரானின் பிறப்பை ஆண்டு தோறும் பெருமங்கலத் திருவிழாவாகக் கொண்டாடுகின்றன - இயேசு நாதரைத் தமது இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்களும், கிறிஸ்தவ மக்களுடன் சேர்ந்து குதூகலமாகக் கொண்டாடுவதை நாம்காண்கிறோம். ஆயின் இப் பண்டிகையின் நடுநாயகராகத் திகழ வேண்டிய இயேசுபிரானுக்கு, அளிக்கப் படவேண்டிய முக்கிய இடத்தை அளித்திருக்கிறோமா? அநேகமாக கிறிஸ்து இல்லாத நத்தார் பண்டிகையைத்தான் நாம் பெரும்பாலும் கொண்டாடி வருகிறோமல்லவா? சிந்தித்துப்பாருங்கள்.

இயேசுபிரான் மாட்டுத் தொழுவத்தில் கன்னிமகனாகப் பிறந்த அன்று "பரமசேனையின் திரள் தோன்றி - இறைவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானம் மனிதர்மேல் பிரியமும் உண்டாவதாக..". என்று இறைவனைத் துதித்தார்கள் (லூக். 2:13,14) ஆம் கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்டத்திலே முக்கிய பங்கு வகித்தவர்கள் வான்தூதர்களாயினும், ஏழைகளாய் வாழ்ந்த ஆட்டு மேய்ப்பர்களும், இந்த நற்செய்தியை அறிவிக்கும்படி பணிக்கப்பட்டனர். என்பதை நாம் மறக்கப்படாது - ஆம். துதித்துக் கொண்டாடியதைக் கண்ட மேய்ப்பர்கள் தாமும் அதேமுறையைப் பின்பற்றித் துதித்தனர் (லூக் 2:20)

கடந்த பல ஆண்டுகளாக நத்தார் பண்டிகையை நாம் கொண்டாடி வருகிறோம். ஆனால், இன்று ஏழைகள். அனாதைகள், விதவைகள், நோயுற்றோர் இவர்களுக்கும் விடுதலை அளிக்க

வாழ்வு வழங்க இறை மகன் இயேசு உலகிற்குள் வந்தார் என்பதை நாம் மறக்கப்படாது - அவர் அளித்த அன்பை. செய்த தியாகத்தை நாம் நினைவுகூர்ந்து, அதனைச்செயல்படுத்து கிறோமா? எங்கள் செயல்பாட்டின் மூலம் மற்றவர்கள் இறைமகன் வந்த நோக்கத்தை எளிதில் விளங்கிக் கொள்வார்கள்.

பாவத்தின் தண்டனைக்குப் பரிகாரமாய்த் தோன்றிய இயேசுவைத் தூதர் சேனை துதித்து வாழ்த்தியது - ஆதாமின் காலத்திலிருந்து மனிதன் இழந்து போன யாவற்றையும் திரும்ப அளிப்பதற்காகத் தோன்றிய எம் பெருமானை அன்று வான்தூதர் போற்றி வாழ்த்தினர். நமது பாவம், சாபம், நோய், துக்கம் இவற்றிலிருந்து மீள முடியாமல் கூனிக்குறுகி வாழவேண்டிய நாம், விடுதலையடைந்து முழுவாழ்வைப் பெறும்படி இயேசு தோன்றினார் என்பதை உறுதியாக நம்புகிறோமா?

அன்பானவர்களே, இயேசு பிறந்ததினிமித்தம் நாம் அனுபவிக்கிற பெறுபேறுகளை, உரிமைகள், ஆற்றல்கள் அனைத்திற்காகவும் நன்றியுணர்வோடு அவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டாடுவதே உண்மையான கிறிஸ்மஸ் கொண்டாட்டம் என்பதை மறவாதீர்கள் அன்று "சாஸ்திரிகள் வீட்டுக்குள் பிரவேசித்து... சாஷ்டாங்கமாய் விழுந்து பிள்ளையைப் பணிந்துகொண்டு.... பொன்னையும் துவர்க்கத்தையும் வெள்ளைப் போளத்தையும் காணிக்கையாக வைத்தார்கள் (மத்2:11) அல்லவா? அவர்கள் இயேசு பாலகனை பச்சிளங் குழந்தையாக மட்டும் கண்டு கொள்ளாமல், அவரைப் பயபக்திக்குரியவராகவும், வணக்கத்திற்குப் பாத்திரமாகவும் கண்டனார் - உடனே சாஷ்டாங்க மாய்ப் பணிந்து தங்களையே இரட்சகருக்குப் படைத்தனர். தங்களிடமிருந்த விலைமதிப்பற்ற பெருங் கொடைகளை மனப்பூர் வமாய் படைத்தனர். தந்தை தம் மைந்தனை மனுக்குலத்தின் மீட்பிற்காகக் கொடுத்தார். - இந்த ஈகையின் விளைவே கிறிஸ்மஸ் கொண்டாட்டம். இம்மாபெரும் கொடையைப் பெற்றுக்கொண்ட நாம், அவருக்கு என்ன கொடுத்திருக்கிறேம்? சிந்தியுங்கள்! - நம்மையும் நமக்கிருக்கிற தாலந்து, நேரம், கல்வி,செல்வம், இறமை...

இவையாவற்றையும் கொடுத்து அர்ப்பணிப்போடு கூடிய படைப்பினால் இயேசுவை கனப்படுத்துவோம் - நம்மைச் சுற்றி வாழும் தேவையிலிருப்போர், ஒடுக்கப்பட்டோர், ஆதரவற்றோரையும் நினைவுகூர்ந்து மகிழ்ச்சியோடு கொடுப்போம் வாருங்கள்! - " மிகவும் சிறியவராகிய... ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் (மத்.25:40) என இயேசுபிரான் கூறினார் அல்லவா?

கிறிஸ்துவை உள்ளன்போடு நேசிக்கிற ஒரு ஏழைச் சிறுமி இருந்தாள் - தான் கஷ்டப்பட்டுக் கொஞ்சமாகச் சேர்த்த பணத்திலிருந்து. தனக்கென ஓர் அழகிய சால்வை வாங்கினாள் அதனைக் கிறிஸ்மஸ் ஆராதனையில் காணிக்கையாகக் படைக்கும்படி கொண்டு போனாள். ஆலயத்திற்குப்போகும் வழியில் ஒரு முதியவர் கடுங்குளிரில் நடுநடுங்கிக் கொண்டு வழியோரத்தில் இருந்ததைக் கண்டு, பரிதாபப்பட்டு இவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென விரும்பினாள். தன்னிடமிருக்கிற சால்வையைத்தவிர அவருக்குக் கொடுக்க வேறொன்றுமில்லையே என வருந்தினாள். ஒரு நிமிடம் யோசித்தாள். பின் தான் வைத்திருந்த புதிய சால்வையை அந்த முதியவருக்கே கொடுத்துவிட்டு, வெறுங்கையோடு ஆலயத்திற்குள் வந்து சேர்ந்தாள்.

கிறிஸ்மஸ் காணிக்கை படைக்கும் நேரம் வந்தது. பெறுமதியான காணிக்கை படைக்கப்படுமாயின், அன்று தூதர் ஆலயத்தின் மணியை ஒலிக்கச் செய்வர் என்ற நம்பிக்கை யிருந்தது. ஒவ்வொருவரும் தங்கள் கரத்திலிருக்கிற விலையேறப் பட்ட கொடையைப் படைத்துவிட்டு. ஆலயத்தின் மணி அடிக்குமா? என ஆவலோடு எதிர்பார்த்தனர்... இல்லை.

ஆலயத்தின் மூலையில் அமாந்திருந்த அச்சிறுமியோ ஒவ்வொருவரும் படைப்பதை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந் தாள். காணிக்கை கொடுக்கும் நேரம் வந்ததும், வெறுங்கையோடே பீடத்தண்டை நெருங்கினாள். இவள் கையில் ஒன்றுமில்லாமல் செல்வதை சிலர் வியப்புடன் நோக்கினர். காணிக்கை படைக்கும்

இடத்தண்டை வந்ததும், ஆண்டவர் உமக்கென்று கொண்டு வந்த கொடையை வறுமையில் வாடிக்கொண்டிருந்த ஒரு முதியவருக்குக் கொடுத்தேன் இப்போது என்னையே படைக்கிறேன் எனச் சொல்லி - கொடைகள் அருகில் முழந்தாளில் நின்று ஒப்படைக்கும் செபத்தைச் செய்தாள்.

உடனே ஆலயமணி தூதர்களால் அடிக்கப்பட்டது. மணியோசையைக் கேட்ட அனைவருடைய கண்களும் பீடத்தண்டை வைக்கப்பட்ட கொடையையும் அதைப் படைத்தவளையும் பார்க்கும்படி திரும்பிய போது பல ஆண்டுகளாய் ஒலிக்காத ஆலய மணி அந்தச் சிறுமி தனக்குரியதையும் தன்னையும் மனமுவந்து படைத்ததை அங்கீகரித்ததின் அடையாளமாக அன்று ஆலய மணி அடித்தது. இச்சிறுமியைப் போலவே, இன்று நாமும் நம்மை அன்புக்கொடையாக இறைவனுக்குப் படைக்கக் கூடுமானால் - பரலோகமே நம்நிமித்தம் களிகூரும் என்பது நிச்சயம்.

"நத்தார் விழா, ஒருவருக்கொருவர்அன்புக் கொடைகளைமனப் பூர்வமாகப் பரிமாறும் பெருவிழா!"

அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன்தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன் - உற்சாகமாய்க் கொடுப்பவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்"

* * * * * *

# செய்தி மடல்

எமது இறையியல் கல்லூரிக்கு பகுதி நேர ஆங்கில ஆசிரியராக Ms. Grace Bunker அவர்கள் கடமையாற்றுகிறார்.

25.09.2003 தொடக்கம் 04.10.2003 வரை கிறிஸ்தவ மாணவர் இயக்கத்தால் (S.C.M) நடத்தப்பட்ட இனங்களுக்கிடையிலான ஒற்றுமை என்ற பொருளில் பல்கலைக்கழக மாணவர்களினால் ஒழுங்கு செய்த நிகழ்வு, கண்டி, கொழும்பு, போன்ற இடங்களில் சிறப்பாக நடை பெற்றது. இந்த நிகழ்வுக்கு எமது கல்லூரி மாணவர்கள் நான்குபேர் சமுகமளித்தனர்.

11.10.2003 தொடக்கம் 24.10.2003 வரையில் அருள்திரு ஈனோக் புனிதராஜா( இறையியல் கல்லூரி விரிவுரையாளர் ) அவர்களின் தலைமையில் பத்து மாணவர்கள் யாழ்பாணத்தின் பல பகுதிகளில் தமது கள ஆய்வை மேற்கொண்டார்கள்.

பல காலங்களாய் தன்னை ஆச்சிரமப்பணியில் ஈடுபடுத்திய பிலிப் அண்ணா அவர்கள் ஆச்சிரமப் பணியில் இருந்து 31.10.2003 அன்று தன்னை முற்றுமாக விலக்கிக் கொண்டார். தமது பிறப்பிடமாகிய மட்டக்களப்பிற்குப் போய்விட்டார்.

05.11.2003 அருள் திரு பெஞ்சமின் ஜெயராஜா அவர்களின் தலைமையில் இறையியல் கல்லூரி மாணவர்களுக்கான ஆழ்நிலைத் தியானம் நடைபெற்றது.

**HALO TRUST** என்ற நிறுவனத்தினர் எமது கல்லூரிக்கு அருகே மிதிவெடிகளை துரிதமாக அகற்றி வருகின்றனர் . இவர்களின் பணியினால் பலர் நன்மை அடைகின்றார்கள்.

குருத்துவப் பணியில் 10ஆண்டுகளை நிறைவ செய்து புதிய ஆண்டுக்குள் பயணப்படும் எமது கல்லூரியின் பழைய மாணவர்களாக அருடதிருவாளர்கள்; A.S தேவகுணானந்தன், D.A. மதியாபரணம், G.F. மைனசீலன், A.K சுரேந்திரன் K.S. ஜோசெப் ஆகியோரை எமது கல்லூரியின் குடும்பத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்: இறையியல் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகக்குழு தெரிவில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- வண. B. ஜெயராஜா

செயலாளர்:- வண V. பத்மதயாளன்

பொருளாளர்:- வண செபஸ்ரியன் அன்ரனி

இதர உறுப்பினர்கள்: அருட்திருவாளர்கள்M. யூட் சுதர்சன், I.ராஜ்குமார், A.S தேவகுணானந்தன், M.D. போல் சுரேஸ்,ஹ J.அன்னரி சுதாகர், சகோ P.R. றோகான் இச் சங்கத்தின காப்பாளராக அருட்திரு T.தேவநேசன் அவர்கள் தொடர்ந்தும் செயல்படுவார்.

கடந்த 26.11.2003 அன்று செராம்பூர் பல்கலைக்க கழகத்தின் பிரதிநிதிகளான அருட்கலாநிதி டான்சன் கார் அருட்கலாநிதி ஆர்த்தர். ஜெயக்குமார், அருட்கலாநிதி P.C.Gine ஆகியோர் கொண்ட குழு எமது கல்லூரிக்கு வருகை தந்து கல்லூரியின் செயற்பாடுகள் தொடர்பாகவும் அதனது முன்னேற்றம் தொடர்பாகவும் ஆலோசனை வழங்கினார்கள்.

## 20ம் ஆண்டில் எமது இறையியல் கல்லூரி

## நமது பழைய மாணவர் பெயரும் அவர்கள் படிப்பு முடித்த ஆண்டும்

| | | |
|---|---|---|
| 01. | வண.P. தேவராசா | 1985 |
| 02. | வண.K.A செல்வநாயகம் | 1987 |
| 03. | சகோ. J. சின்னத்துரை | 1988 |
| 04. | வண J. ஞானப்பிரகாசம் | 1988 |
| 05. | வண.T. H. வசந்தகுமார் | 1989 |
| 06. | வண.B. S. தேவகரன் | 1989 |
| 07. | வண.P. ஜெரோம் போல் | 1989 |
| 08. | வண.S. அன்ரனி சவரிமுத்து | 1989 |
| 09. | வண.I. அருள்பாலன் | 1990 |
| 10. | வண.J. தேவருட் செல்வம் | 1990 |
| 11. | வண.M. மில்ரன் சொலமன் | 1990 |
| 12. | வண.N. T. ஜெயநேசன் | 1990 |
| 13. | சகோ. P.லோகநாதன் | 1991 |
| 14. | வண.S. I. ஆனந்தராஜா | 1991 |
| 15. | வண T. E. அசோக்குமார் | 1991 |

16. வண.செபஸ்ரியன் அன்ரனி 1991

17. சகோ. P. நடராசா 1991

18. வண.பெஞ்ஜமின் ஜெயராசா 1991

19. சகோ. K. எட்வேட் ஜெயராசா 1992

20. வண. A.S தேவகுணாநந்தன் 1993

21. வண. D.S மதியாபரணம் 1993

22. வண. G. டிலோ மைனசீலன் 1993

23. வண.A.K. சுரேந்திரன் 1993

24. வண. K.S. ஜோசெப் 1993

25. வண. I. குமரேசன் 1995

26. வண. G. ஜோய்ஸ் குணதேவி 1995

27. வண. M.D போல் சுரேஷ் 1995

28. வண. R.ஜோன் செல்வம் 1995

29. வண. V. பத்மதயாளன் 1995

30. சகோ. ஜோன் தேவசகாயம் 1996

31. வண. S. குகனேஸ்வரன் 1997

32. வண. B. தேவதாஸ் 1997

33. வண. M. யூட் சுதர்சன் 1997

34. வண. டெய்சி ஆசீர்வாதம் 1997

35. வண. தயாளினி செல்வராஜா 1997

வண. J. அன்ரனி சுதாகர் 1998

38. வண. T. யோசுவா சிவஞானம் 1998

39. வண. I. ராஜ்குமார் 1999

40. சகோ. A. சௌந்தரராஜன் 1999

41. சகோ. S. சதீஸ் டானியல் 2001

42. சகோ. S. ஜோய் துரைரட்ணம் 2001

43. சகோ. K.அன்றூ ஜெயானந்தம் 2001

44. சகோ. P.R. ரோகான் 2001

45. சகோ. A.S. றூபன் 2002

46. சகோ. S. செல்வந்தா 2002

47. சகோ. S.L. ஜோன் 2002

48. சகோ. Y. நேவில் ரூபராஜ் 2003





01127219800

OCO 221321O

*With best compliments from*

**Ocean Trading Co.**

General Hardware Merchants

**376, OLD MOOR STREET,**
**COLOMBO - 12**
**TEL : 2436876, 2438155,**
**2459647**
**FAX: 4618419**

With best compliments from

**AMERICAN CEYLON**
**MISSION PRESS**

Jaffna college Under - graduate
Department Complex
464, Hospital Road, Jaffna.